438

உ

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ யாக்ஞவல்கிய சரித்திரம்.

15 MAR 1929
MADRAS

கும்பகோணம்
டவுன் ஹைஸ்கூல் ரிடையர்ட் ஸம்ஸ்கிருதபண்டிதர்
**R. சிவராமசாஸ்திரியார்**
இயற்றியது.

கும்பகோணம்
தையல்நாயகியம்மன் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

———

] 1928. [ விலை அணா ஏழு.

223025

உ

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ யாக்ஞவல்கிய சரித்திரம்.

3676
922-945

OFFICE OF THE
No.
15 MAR 1929
MADRAS

கும்பகோணம்
டவுன் ஹைஸ்கூல் ரிடையர்ட் ஸம்ஸ்கிருதபண்டிதர்
**R. சிவராமசாஸ்திரியார்**
இயற்றியது.

கும்பகோணம்
தையனாயகியம்மன் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

---

பதிவு செய்தது.] **1928.** [விலை அணா ஏழு.

உ

# விஷயஸூசிகை.


| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| 1. | முன்னோர்களின் வரலாறு ... ... | 1 |
| 2. | பிரும்மராதரின் தவம் ... ... | 3 |
| 3. | ஸ்ரீ மஹாவிஷ்ணுவின்பிரத்யக்ஷம் ... | 4 |
| 4. | ஸ்ரீ மஹாவிஷ்ணு வரமளித்தது ... | 5 |
| 5. | ஸுனந்தையின் கர்ப்பம் ... ... | 6 |
| 6. | சிசுவை ஸ்ரீ மஹாவிஷ்ணு அனுக்கிரஹித்தது | 8 |
| 7. | ஸ்ரீ யாக்ஞவல்கியரின் அவதாரம் ... | 10 |
| 8. | அசரீரவாக்கு ... ... | 11 |
| 9. | நாமகரணம் ... ... | 12 |
| 10. | பாலலீலை ... ... | 13 |
| 11. | பிருஹஸ்பதியின் வருகை ... ... | 14 |
| 12. | உபநயனம் ... ... | 16 |
| 13. | யாக்யவல்கியர் அத்யயனஞ்செய்தது ... | 17 |
| 14. | நாரதர் மேருபர்வதத்திற்குச் சென்றது ... | 18 |
| 15. | பிரும்மஹத்யா ... ... | 20 |
| 16. | யாக்ஞவல்கியர் ஆசார்யருடைய தோஷத்தை விலக்கியது ... | 21 |
| 17, | வைசம்பாயனர் தம்முடைய சிஷ்யர்களை ஆரசனுடைய மாளிகைக்கு அனுப்பியது ... | 23 |
| 18. | வைசம்பாயனருடைய கட்டளையும் மறுப்பும்... | 25 |
| 19, | வைசம்பாயனர் வேதத்தைக் கேட்டது ... | 26 |
| 20. | ஸ்ரீ யாக்ஞவல்கியர் வேதத்தைக் கொடுத்தது | 28 |
| 21. | வேதம் தைத்ரியமானது ... ... | 31 |
| 22. | காயத்திரி பிரத்யக்ஷமானது ... ... | 33 |

| | | |
|---|---|---|
| 23. | ஸ்ரீ யாக்ஞவல்கியர் ஸ்ரீ ஸூர்யபகவானிடம் உபதேசம்பெற்றது ... | 35 |
| 24. | ஸ்ரீ யாக்ஞவல்கியர் பூலோகத்திற்கு வந்தது ... | 40 |
| 25. | ஸ்ரீ யாக்ஞவல்கியரைச்சித்திரரதன் ஆசார்யராகக் கொண்டது ... | 41 |
| 26. | ஸ்ரீ யாக்ஞவல்கியர் கோதாவரி தீரத்தில் வஸித்தது ... | 42 |
| 27. | காத்யாயனியின் விவாஹம் ... ... | 43 |
| 28. | மஹர்ஷிகளின் குடியேற்றம் ... ... | 43 |
| 29. | இராஜஸூயம் ... ... | 44 |
| 30. | ஸ்ரீ யாக்ஞவல்கியர் அக்ரபூஜை பெற்றது ... | 46 |
| 31. | ஸ்ரீ யாக்ஞவல்கியர் மஹர்ஷிகளை வென்றது | 48 |
| 32. | ஸுவர்ணப் பசுக்களைப் பிழைப்பித்தது ... | 51 |
| 33. | மஹர்ஷிகள் பிரும்மதேவரிடஞ் சென்றது ... | 52 |
| 34. | கார்க்கியின் வருகை ... ... | 54 |
| 35. | கார்க்கியின் ஸம்வாதம் ... ... | 55 |
| 36. | கார்க்கியின் விவாஹம் ... ... | 57 |
| 37. | புத்திரப்பேறு ... ... | 59 |
| 38. | உத்தாலக ஸம்வாதம் ... ... | 59 |
| 39. | சாகல்ய ஸம்வாதம் ... ... | 63 |
| 40. | மைத்ரேயிக்கு உபதேசஞ் செய்தது ... | 68 |

# முகவுரை.

---

உலகத்திலே தர்மத்திற்கு வாட்டமும், அதர்மத்திற்கு விருத்தியும் எப்பொழுது தோன்றுகின்றனவோ அப்பொழுது துஷ்டர்களைச் சிக்ஷித்து ஸாதுக்களை ரக்ஷித்தற் பொருட்டும், அதர்மத்தை ஓட்டித் தர்மத்தை நாட்டும்பொருட்டும் பகவான் தமக்கு இஷ்டமான சரீரத்தை அங்கீகரித்துக் கொண்டு பூமியிலே அவதரிக்கிறார் என்பதும், அது யுகந்தோறும் அவ்வக்காலத்திற்குத் தக்கவாறு அமைந்து வருகின்றது என்பதும் பலர்க்கும் தெரிந்தனவே. அத்தகைய பகவதவதாரங்கள் பல.

உலகத்தின் ஸ்திதிக்கு முக்கிய காரணமாவது வேதம். வேதத்தால்தான் தர்மத்தை அறியவேண்டும். தர்மத்தால்தான் உலகஸ்திதி உண்டாதல்வேண்டும். உலகத்தைத் தரிக்கும் காரணத்தால்தான் அதனைத் தர்மம் என்று சொல்லுகிறார்கள். இதனாலேயே பிராம்மண, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திரர் முதலிய ஜாதிகளுக்கும், பிரும்மசர்யம் முதலிய ஆச்ரமங்களுக்கும், உரியவையான தர்மங்களை நிரூபிக்கும் வேதங்களை ஸம்ரக்ஷிக்கவேண்டியது ஸ்ரீமந் நாராயணனது இன்றியமையாக் கடமையாகின்றது.

"முன்னொருகாலத்தில் ப்ரும்மதேவர் தூங்கும் ஸமயத்தில் நைமித்திகப்பிரளயத்தில் ஸோமகன் என்ற அஸுரன் ப்ரும்மதேவரது முகத்திலிருந்து வேதங்களை அபஹரித்துக் கொண்டு ஸமுத்திரத்திற்குள் மறைந்தான். ப்ரும்மதேவர் விழித்தெழுந்ததும் வேதங்கள் தோன்றாமையால் காலைப்

பூஜையைச்செய்ய வழியறியாது மயங்கலானார். உடனே, நாரதர் பாஞ்சாராத்ராகமப்படி ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஆராதனத்தைக் காலந்தவறாது நடத்தும்படி சொல்லி ஆகமத்தை வெளியிட்டார். அம்முறையே கால ஆராதனம் நடந்தேறியது. ஸ்ரீமந் நாராயணமூர்த்தி வேதங்களைத் திருப்பிக் கொண்டு வருவதற்காக மத்ஸ்யாவதாரம் எடுத்துக்கொண்டு பிரளயஜலத்திலே புகுந்தார்; ஸோமகனைக்கொன்று வேதங்களை எடுத்துவந்து ப்ரும்மதேவரிடம் கொடுத்தார்'' என்று மத்ஸ்யபுராணமும் பிர்ம்மாண்டபுராணமும் கூறுகின்றன.

இம்மாதிரியே வேதங்களைக் காப்பதற்காகவும், ஒளிந்து போன மந்திரங்களைக் கண்டுபிடித்து லோகத்திலே பரவச் செய்வதற்காகவும் ஸ்ரீ மஹாவிஷ்ணு ப்ரும்மர்ஷிகளாகவும் அவதரிப்பது வழக்கம். அம்முறைப்படி முதல் மஹாயுகத்தில் [ மானஸம், வாசிகம், ச்ரார்வணம், நாஸக்யம், அண்டஜம் பத்மஜம் என்று ஏழுசல்பங்கள் மஹாபாரதம் சாந்திபர்வம் 357 வது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ] மானஸகல்பத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஸங்கல்பத்தால் ஒரு மஹர்ஷி ஆவிர்ப்பவித்தார். அவர் பெயர் ப்ரும்மராதர் என்பது. அவர் பல வருஷகாலங்கள் தவஞ்செய்து எல்லா வேதங்களையும், அவற்றின் அங்கங்களையும் அத்யயனஞ் செய்து எல்லாரும் கொண்டாடத்தக்க மஹிமைவாய்ந்தவராக விளங்கினார். ஸாஸ்வதியின் அம்சாவதாரமான ஸுனந்தா தேவியை மணந்து கொண்டார்; இல்லற தர்மத்தை இனிது நடத்தி வந்தார்; அவர்களுக்கு ஸானந்தர் என்ற ஒரு புத்திரர் தோன்றினார். அவர் தாயின் கர்ப்பத்தில் இருக்கும் பொழுதே ஸ்ரீ மஹாவிஷ்ணுவால் ஞானோபதேசம்பெற்றுப்பலசிறப்புக்களுடன்வாழ்ந்து ஜீவன்முக்தராக விருப்பவர். அவருக்கு யாக்ஞவல்கியர் என்பதும் ஒரு பெயர். அவர் யோகஸம்பந்தமாகப் பலநூல்களைச் செய்திருக்கிறார்;

மூன்று காண்டங்களையுடைய ஸ்மிருதி ஒன்றையும் இயற்றி இருக்கிறார். அதுவே 'யாக்ஞவல்கிய ஸ்மிருதி' என்று இப்பொழுதும் வழங்கி வருகிறது.

அந்தயாக்ஞவல்கிய யோகீச்வரரது வேதபாரம்பரியத்தை யுடைய எனக்கு "அந்த மஹானது சரித்திரத்தையும, அவர்களுடைய சிஷ்யர்களாகிய வாஜஸநேயர்களது மஹிமையையும் எழுதி வெளியிட்டு எனது ஆத்மாவைக்கிருதார்த்தமாகச் செய்து கொள்ளவேண்டும்" என்ற எண்ணம் வெகுகாலமாகஇருந்தது. அந்த எண்ணத்தைப்பூர்த்திசெய்து வைக்கப் பகவான் செய்த திருவருளோ என்றுநான் நினைத்து மகிழுமாறு திருநெல்வேலி ஜில்லா மேலச்செங்கல் யாக்ஞவல்கிய மடாபிமானிகளும், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள யாக்ஞவல்கிய சிஷ்யர்களும் என்னைத்தங்களது பரமாசார்யர்களது சரித்திரத்தை எழுதி வெளியிடுமாறு வேண்டிக் கொண்டார்கள்.

இங்கிலையில் யஜுஸ்தத்வம்என்றஒருபுஸ்தகத்தை மூன்று படலங்களாக ஸம்ஸ்கிருதத்தில் எழுதிவைத்திருந்த யான் அதனைப் பிறகு வெளியிடலாம் என்று கருதி எல்லாருக்கும் எளிதில் விளங்கக்கூடிய தமிழ்ப் பாஷையில் ஸ்ரீ யாக்ஞவல்கியருடைய சரிதத்தை எழுதி வெளியிடமுயலலானேன். அந்தச் சரித்திரம் ச்ருதி, ஸ்மிருதி, புராணம் முதலியவைகளில் ஆங்காங்குச் சொல்லப்பட்டிருந்தாலும் கோவையாகக் கிடைக்கவில்லை. இதைப்பற்றி முன்னோர்களால் எழுதப் பட்ட பல புஸ்தகங்களையும் அவைகளுக்கு ஆதாரமாகவுள்ள வேதங்களையும் படித்துக் கோவையாக இந்தச்சரித்திரம் எழுதப் பெற்றது.

இப்புஸ்தகத்தில் எனது சிற்றறிவுக்குப் புலப்படாத பல பிழைகள் காணப்படலாம். அவைகளை எடுத்துக் காட்டுபவர்களிடம் நன்றி பாராட்டுவதுடன் அடுத்த பதிப்பில் அவைகளைத் திருத்தியுங்கொள்வேன்.

இப்புஸ்தகத்தை வெளியிடுவதில் பொருளுதவி செய்த மேலைச்செவ்வல் யாக்ஞவல்கிய மடாபிமானிகளிடமும், பிழையின்றிப்பரிசோதனை செய்து உபகரித்த கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்களிடமும் நன்றி அறிவுள்ளவனாக விருக்கிறேன்.

இப்படி,

ஆர். சிவராம சாஸ்திரி.

ஓம்

உ.

மங்களாத்மனே நம:

# ஸ்ரீ யாக்ஞவல்கிய சரித்திரம்.

वन्देहं मङ्गलात्मानं भास्वन्तं वेदविग्रहम् ।
याज्ञवल्क्यं मुनिश्रेष्ठं जिष्णुं हरिहरप्रभुम् ॥
जितेन्द्रियं जितक्रोधं सदाध्यानपरायणम् ।
आनन्दनिलयं वन्दे योगानन्दमुनीश्वरम् ॥

## முன்னோர் வரலாறு.

உலகங்களைப் படைப்பது, காப்பாற்றுவது அழிப்பது ஆகிய முத்தொழில்களை லீலையாகச்செய்துகொண்டிருப்பவரும்; ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குண ஸ்வரூபமாகிய மாயையைத் தமது வசப்

படுத்திக்கொண்டிருப்பவரும்; ஆதிசேஷனாகிய படுக்கையிலே படுத்துக்கொண்டு எல்லா உலகங்களின் யோகக்ஷேம நிர்வாஹகமான யோகநித்திரையைச் செய்துகொண்டிருப்பவரும் ஆகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தி ஜகத்தின் க்ஷேமத்திற்காக முன்னொருகாலத்தில் (ஆதிமஹாயுகத்தில் மானஸகல்பத்தில்) ஸங்கற்பம் செய்யலானார்.

அமோக ஸங்கற்பமுடைய அவரது அந்த ஸங்கற்பத்தின் பயனாக வேறொரு ப்ரும்மாவைப்போல ஒரு பிராம்மணச்சிரேஷ்டர் தோன்றினார். அவர் ப்ரும்மத்தைஅறிந்தவர்களுக்குட் சிறந்தவர்; எப்பொழுதும் ஸ்ரீமஹாவிஷ்ணுவைத் தியானஞ்செய்துகொண்டிருப்பவர்; அவரது பெயர் ப்ரும்மராதர் என்பது. பால்குன (பங்குனி) பௌர்ணமி, பூர்வபல்குனி (பூரம்) நக்ஷத்திரம், வியாழக்கிழமை, விருச்சிகலக்கினம் என்பன கூடிய நல்ல நாள் அவரது ஜனனகாலமாகும். *

ப்ரும்மராதர் ஜனனமானகாலத்தில் உலகினர் மனத்தெளிவை அடைந்தனர். அதனால் உலகினருக்கு உண்டாகும் உபத்திரவங்கள் இந்தப்ரும்மராதரால் பரிஹரிக்கப்படும் என்று பெரியோர்கள் சொல்லத் தொடங்கினார்கள்.

---

* இந்தப்ரும்மராதர் பாத்மகல்பத்திற்கு முந்தியவர் என்பதைக் காலவசநபதத்திலும், பிரஸ்தாவகதம்ப்ராத்ந காரத்திலும் காண்க.

ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அனுக்கிரஹத்தால் அந்தப்ருஹ்மராதர் உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களை விதிப்படி அடைந்தார்; எல்லா வேதங்களையும் அங்கங்களுடன் அத்யயனஞ்செய்தார்; எல்லாக்கலைகளிலும் பிதாபோலவிளங்கினர்; பொறுமையிலே பூமியையும், ஞானத்திலே ஸனகாதிகளையும் வென்றார். எல்லாமஹர்ஷிகளாலும் துதிக்கப்பெற்றார்.

பின்னர் ப்ருஹ்மராதர் ஸ்ரீ மந்நாராயணனுடைய கருத்திற்கிணங்கத் தேவமாதாவான அதிதியின் புத்திரியான *ஸரஸ்வதியின் அம்சாவதாரமாகத் தோன்றிய ஸுனந்தா என்னும் பெண்மணியை மணந்துகொண்டார். அவள் ஸ்திரீகளுக்கு இருக்கவேண்டிய எல்லா நற்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்றவள்.

## பிருஹ்மராதரின் தவம்.

ப்ருஹ்மராதர், ஸுனந்தா என்ற அவ்விருவரும் மனமொத்துக் கிரஹஸ்தாச்சிரமத்திற்கு உரிய தர்மங்களை விதிப்படி நடத்திவந்தனர்; வேதாத்தியயனம் முதலியவற்றால் ரிஷிகளின் கடனையும், யாகாதிகளால் தேவர்களது கடனையும், நிவர்த்திசெய்துகொண்டனர். என்றாலும், அவர்களுக்குப் புத்திரப்

* ஸுனந்தாதேவி ஸ்ரீஸரஸ்வதியின் அம்சாவதாரமென்பதை சதபத ப்ராஹ்மணத்தில் பார்க்கவும்.

பேறு உண்டாகவில்லை. "ரிஷிகள், தேவர்கள் என்ற இருவர்களுக்குச்செலுத்தவேண்டிய கடன்களிலிரு ந்து விடுபட்டோம்; பிதுருக்களின் கடனிலிருந்து விடுபடப்புத்திரோத்பத்திஉண்டாகவில்லையே" என்று அவ்விருவரும் கவலைகொள்ளலாயினர். "புத்தென் பது நரகம் புத்திற் புகாதவிப்பான்—புத்திரன்" என் றும், "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த— மக்கட்பேறல்ல பிற" என்றும் உள்ள வாக்கியங் களின் கருத்துக்களைக்கருதலாயினர்; உடனே அதன் பொருட்டுக்கடுந்தவம் புரியலாயினர்; உஷ்ணம், மழை, பனி, குளிர் ஆகியவற்றைப் பொருட்படுத்தா மல் வெகுகாலம் ப்ரும்மராதர் தவம்புரிந்தார்.

## ஸ்ரீமஹாவிஷ்ணு ப்ரத்யக்ஷமானது.

---

தவத்திற்கு மகிழ்ந்த மஹாவிஷ்ணு கருடன் மீதேறிக்கொண்டு அந்த அந்தணச்சிரேஷ்டரின் முன்னேதோன்றினர்; "ஏ, பிராம்மணச்சிரேஷ்டரே, உமது தவத்திற்கு மகிழ்ந்தோம். நீர்செய்யும் தவத் தை நிறுத்தும்; வேண்டியவரத்தைக்கேளும். தரு வோம்" என்றுசொன்னர்.

அமிருதப் பெருக்குப்போன்ற அந்த வார்த் தையைக்கேட்ட ப்ரும்மராதர் மஹாவிஷ்ணுவைப் பார்த்து "ஏ, பகவன், தாங்கள் எனது தவத்திற்கு மகிழ்ந்து எனக்கு இஷ்டமான வரத்தைக்கொடுக்கிற

தாகத் திருவாய் மலர்ந்தருளியமையால் எனது கருத்தைத்தெரிவித்துக்கொள்கிறேன். கருணைகூர்ந்து அதனை நிறைவேற்றித்தந்தருளவேண்டும். அது 'நற்குணங்கள் முற்றும் ஒருங்கே அமைந்த ஒருஸத்புத்திரனைத்தந்தருளவேண்டும்' என்பதே. அன்றியும், அப்புதல்வன் எல்லாக்கலைகளிலும் நிகரற்ற அறிவு வாய்ந்தவனாக இருத்தல்வேண்டும்; எல்லா மஹர்ஷிகளாலும் கொண்டாடத்தக்கவனாகவும், உலகத்துக்குப் பேருபகாரத்தைச்செய்பவனாகவும் இருத்தல் வேண்டும். அதிகம் கூறுவானேன். எல்லா வகையாலும் அப்புத்திரன் தம்மைப்போன்றவனாகவே இருத்தல்வேண்டும். இதுவே எனது பிரார்த்தனையாகும்" எனக்கூறினர்.

## ஸ்ரீமஹாவிஷ்ணு வரமளித்தல்.

---

கேட்ட மஹாவிஷ்ணு புன்னகைகொண்டு ப்ரும்மாதரை நோக்கி "அந்தணச்சிரேஷ்ட, நான் ப்ரும்மஸ்வரூபியாக விருந்து இந்த உலகத்தைப் படைக்கிறேன்; விஷ்ணுவாகவிருந்து காப்பாற்றுகிறேன்; உருத்திரனாகவிருந்து அழிக்கிறேன். அம்முறையில் எனக்கு ஸமம் நானே. உமது வேண்டுகோளைப்பூர்த்திசெய்யவேண்டுமாயின் நானேதான் உமக்குப்புத்திரனாகப்பிறத்தல்வேண்டும். உமது தவத்திற்கு மகிழ்ந்தேன் ஆதலின் நானே உமக்குப்புத்திரனாக அவதரிக்கிறேன். அந்த அவதாரத்தில் எமக்

குக் காத்யாயனியும், மைத்ரேயியும் பத்தினிகளாவார்கள். நீர்கவலைப்படவேண்டாம். உமது இஷ்டம் பூர்த்தியாகும்'' என்றுகூறி மறைந்தார்.

பிரும்மாண்டபுராணம் *

## ஸுனந்தாதேவியின் கர்ப்பம்.

---

அப்பால், சிலநாட்கள்செல்ல ஸுனந்தாதேவியார் கர்ப்பவதியாயினர். அக்கால் அத்தேவியாரின் உடலில் வெண்மைநிறத்தைக்கண்டவர் கர்ப்பத்திலுள்ள சிசுவின் கீர்த்தியின் சிறப்புக்குறி, வயிறுபருத்திருப்பதைக்கண்டவர், அவரது வளர்ச்சிக்கும் அறிகுறிகளாக அவற்றைக்கூறலானார்கள். ஸுனந்தாதேவியின் வயிற்றிலிருக்கும் பகவானைத்தர்சனம்பண்ணவிரும்பிய பூமிதேவி சிறிய உருவத்துடன் அவரது வாயிற்புகுந்தாள் (ஸுனந்தாதேவி மண்ணைக்கிள்ளித்தின்றாள் என்பது கருத்து) 'தமது வயிற்றில் இருக்கும் குழந்தையஜுர் வேதத்தைக் கக்கப்போகின்றது' என்பதைக்காட்டுபவர்போல் அத்தேவியார் அடிக்கடி வாந்திசெய்து வந்தனர். இம்மாதிரியான பலவகைப்பட்ட கர்ப்பச்சின்னங்களும் அத்தேவியாரிடம் வளர்ந்துவரலாயின.

இங்ஙனம் ஐந்து வருஷங்கள் நிறைவாகியும் ஸுனந்தை பிரஸவிக்கவில்லை. அப்பொழுது ப்ருமமாதர் கர்ப்பத்திலிருக்கும் சிசுவைநோக்கி "குழந்தாய், நீ கர்ப்பத்திலேதோன்றி ஐந்து வருஷங்களா

கின்றனவே; அப்படியிருக்க நீ ஏன் இன்னும்வெளி வரவில்லை? இப்படித் தாயைக்கஷ்டப்படுத்தலாமா? சீக்கிரம் வெளியிலேவா" என்றனர். (கர்ப்பத்திலே இருபத்துநான்குவருஷங்கள்சென்றன என்பார் சிலர்)

அதனைக்கேட்டதும் கர்ப்பத்திலுள்ள சிசு ப்ரும்மராதருக்குக்கேட்குமாறு "ஏ, தாத, ஸ்ரீமஹா விஷ்ணுவின்மாயை அவருக்குத்தான் வசப்பட்டது. மற்றவர்கள் அந்த மாயைக்குவசப்பட்டவர்கள்; நான் அந்த மாயைக்கு அஞ்சுகிறேன். ஆதலினால் நான் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளியில்வரவில்லை, தாமரைக்கண்ணனாகிய ஸ்ரீமந் நாராயணன் தமது கருணை நிரம்பிய கடைக்கண்ணால் எனக்கு அனுக்கிரஹம் பண்ணி மாயையினின்றும் உபத்திரவம் ஏற்படாவண்ணம் என்னைக்காப்பாரானால் நான் வெளிவருவேன்" என்று மறுமொழி கூறிற்று.

கேட்டனர் ப்ரும்மராதர்; ஆச்சரியம்கொண்டனர்; வைகுண்டம் சென்றனர்; நித்யஸூரிகளாலும், கருடன்முதலிய பார்ஷதர்களாலும் உபாஸிக்கப் பெற்று ஆதிசேஷனாகிய படுக்கையில் ஸ்ரீதேவி, பூதேவி, நீலாதேவிமார்களுடன் யோகநித்திரை செய்யும் ஸ்ரீமந் நாராயணனைத்தரிசித்தனர்; வைதிகமான ஸ்துதிகளால் ஸ்தோத்திரஞ் செய்தனர்.

ப்ரும்மராதரது அந்த உத்தமமான ஸ்தோத்திரங்களைக்கேட்ட மாதவர் மிக்க ஸந்தோஷத்தை அடைந்தார்; ப்ரும்மராதரை நோக்கிவந்தகாரியத்தை

வினவினர். வின்விலும், ப்ரும்மாதர் "ஜகதீச! தங்களுடைய கிருபாபலத்தால் எனது மனைவியான ஸுனந்தையின் வயிற்றிலே தோன்றிய கர்ப்பம் ஐந்து வருஷங்களாகியும் வெளிவரவில்லை. காரணத்தை அறிய விரும்பி வினவியஎனக்கு 'நான் ஸ்ரீமஹா விஷ்ணுவினுடைய மாயைக்குஅஞ்சி வெளிவரவில்லை; அவரது திருவருளைப்பெற்றுத்தான் வெளிவருவேன்' என்று மறுமொழிகூறுகின்றது அச்சிசு. ஸுனந்தை கர்ப்பத்துடன் பெரிதும் வருந்துகின்றாள். தேவரீர் தயைசெய்து கருணைபாலித்தருளவேண்டும்" என்று வேண்டினர்.

## கர்ப்பத்திலிருக்கும்சிசுவை ஸ்ரீமஹாவிஷ்ணு அனுக்கிரஹித்தது.

---

ப்ரும்மாதரது விசித்திர ஸ்துதிகளால் மகிழ்வுற்ற பரமபுருஷர் அவரது வேண்டுகோளுக்கிணங்கி வேதஸ்வரூபமாகிய கருடன்மீதேறிக்கொண்டு ப்ரும்மாதருடன் அவரது ஆச்ரமத்தை நோக்கிப்புறப்பட்டார். அப்பொழுது பார்ஷதர்கள் குடைபிடிப்பது, சாமரம் வீசுவது முதலியவற்றால் உபசரித்தார்கள். ப்ரும்மா, சிவன்முதலானதேவர்களும்,ஸனகர்முதலிய மஹர்ஷிகளும் பின் தொடர்ந்தார்கள்; ஸகல வேதங்களுங்கட்டியங்கூறின. ஜயன், விஜயன் முதலியவர்கள் தங்கப்பிரம்புகளால் ஜனங்களை விலக்கிக்கொண்டு முன்னேசென்றார்கள். சுகர்,சௌனகர்முதலாயவர்கள்

"ஏ, தாமரைக்கண்ண, ஜய, ஜய" என்று கோஷஞ் செய்தார்கள். இம்மாதிரியான வைபவங்களுடன் ஸ்ரீலக்ஷ்மீபதி புன்னகைகொண்டு ஸ்ரீவைகுண்டத்திலிருந்து ப்ரும்மராதரது ஆச்ரமத்தை அடைந்தார்.

அடைதலும், ப்ரும்மராதர் பேரானந்தமுற்றார்; தமது ஆச்ரமத்திற்கு எழுந்தருளியுள்ள தேவர்கள், மஹர்ஷிகள், பார்ஷதர்கள் முதலாயினார்க்கும், லக்ஷ்மீதேவியுடன்கூடிய பகவானுக்கும் விதிப்படி வந்தனை வழிபாடுகளையும், பூஜைமுதலியவற்றையும் செய்தார்; மனைவியுடன் கைகூப்பி நின்றார்.

நிற்றலும், ஸ்ரீமஹாவிஷ்ணு ஸுனந்தையின் கர்ப்பத்திலிருக்கும் சிசுவைநோக்கி "குழந்தாய், நீ என்னுடைய அம்சமானவனல்லவா? உனக்கும் மாயையின் பரிபவம்உண்டாகுமா? மாயைஎன்றவஸ்து தான் உண்மையில் உண்டா? இல்லையே. உனக்கு ஏன் வீண்பயம் உண்டாயிற்று?" என்பன முதலிய உண்மைகளை (ஆத்மஸ்வரூபத்தை) வேதாந்த வாக்கியங்களைக்கொண்டு விஸ்தாரமாகப்போதித்தார்; ஸகல ஸம்சயங்களையும் நிவர்த்தித்தார்; ஞானோபதேசம் பண்ணினார்; விசேஷ அனுக்கிரஹங்களைச்செய்தார்; ப்ரும்மராதரிடம் விடைபெற்றுத் தமது உலகத்திற்குச்சென்றார். கர்ப்பத்திலுள்ள சிசு ஸ்ரீமஹாவிஷ்ணுவின் உபதேசத்தைப் பெற்று இஷ்டபூர்த்தியை அடைந்து பெருமகிழ்வுற்றது.

## ஸ்ரீயாக்ஞவல்கியரின் அவதாரம்.

இப்படியாக, எல்லாலோகங்களுக்கும் ஸந்தோஷத்தைக்கொடுக்கக்கூடிய சரத்ருது, கார்த்திக சுத்த ஸப்தமிதிதி, சதபிஷக்நக்ஷத்திரம், பானுவாரம் தனுர்லக்கினம் என்பன சேர்ந்த நல்லவேளையில் ஸுநந்தாதேவியார் அந்தப் புத்திர ரத்தினத்தைப் பெற்றார். அக்கால், பிறந்த அக்குழந்தையின் தேஜஸ்ஸால் அந்தப்பிரஸவக்கிருஹம் கோடி சந்திரர்கள் உதயமானாற்போல ஒளிவீசியது. அக்குழந்தையைக் கண்ட முனிவர்கள் 'தத்துவஞானமே உருவெடுத்து வந்திருக்கின்றதோ' எனக்கருதினார்கள், 'யஜுர் வேதமே மனித உருக்கொண்டுவந்துளதோ' என்றும் 'ப்ரும்மராதரின் தவமே குழந்தையாகத்தோன்றியிருக்கின்றதோ' என்றும், 'யோகசாஸ்திரங்களே அவயவங்களுடன் மனிதவடிவமாகப்பிறந்திருக்கின்றனவோ' என்றும் அக்குழந்தையைக்கண்ட ஸுநந்தாதேவியார் கருதி மகிழ்வுற்றனர். அதிகமாக என் கூறவேண்டும்? ஆஸ்திகர் அனைவரும் மனமிகழ் பூத்துத் திகழ்ந்தனர்; எங்கும் அந்தப்புத்திரோத்ஸவத்தை எல்லாரும் கொண்டாடினர்.

'ஸுநந்தாதேவியின் கர்ப்பத்திலிருந்து அவதரித்த சிறுவன் தமக்குச்சிஷ்யனாகப்போகிறான்' என்று மகிழ்ச்சியடைந்தவர்போலச் சூரியபகவான் அன்று ஆயிரம் கிரணங்களுடனும் சிறப்பாகப்பிரகா

சித்தார். திக்குகள் அச்சிறுவனது உத்தமமான கீர்த்தியாகிய முத்துக்களாலான மாலையால் தங்களுக்கு உண்டாகப்போகின்ற அழகைநினைத்துச்சிரித்துமகிழ்வனபோலச்சிறந்துவிளங்கின. நீர்நிலைகளெல்லாம் கலங்கலின்றித் தெளிந்தனவாகக்காணப்பட்டகாட்சி 'அந்த மஹாபுருஷனது அனுக்கிரஹத்தால் ஜடர் (மூடர்) களுடைய மனங்களும் சுத்தமாகப்போகின்றன' என்பதை முன்னர்க்காட்டுவதுபோலத்தோன்றிற்று. இந்த மஹாபுருஷன் பிறந்தமையால் பரிசுத்தமான இந்தஇடத்திற்கு 'எனது ஸஞ்சாரத்தால் என்ன விசேஷமஹிமை உண்டாகப்போகிறது' என்று கருதியவர்போல வாயுபகவான் மெதுவாக வீசலுற்றார். 'அவதரித்த பகவதம்சத்தை அனைவரும் பிரதக்ஷிணம்செய்யவேண்டும்' என்பதைத்தெரிவிப்பவர்போல அக்னிபகவான் பிரதக்ஷிணஜ்வாலையாக விளங்கினர்.

'பூமியில் உதித்திருக்கிற பூர்ணசந்திரனைத்தரிசிக்கவந்து கூடிய நக்ஷத்திரக்கூட்டங்களோ' எனக் காண்போர் கருதுமாறு ஆகாயத்திலிருந்து கற்பக விருக்ஷங்களின் புஷ்பங்கள் தேவர்களால் வர்ஷிக்கப் பெற்றன.

## அசரீரவாக்கு.

---

இங்ஙனமாக, புத்திரோத்பத்தியால் பேரானந்தமுற்றிருக்கும் ப்ரும்மராதர் கேட்கும்வண்ணம்

"ஏ, பிராம்மணச்சிரேஷ்ட, "இக்குழந்தை காயத்திரியின் அனுக்கிரஹத்தைப்பெறும். ஸூர்யபகவானுக்குச் சிஷ்யனாக இருந்து வேதாத்யயனஞ்செய்யும். எல்லா மஹர்ஷிகளையும் வெல்லக்கூடிய அறிவும் ஆற்றலும் இச்சிறுவனுக்கு உண்டாகும். இச்சிறுவன் தத்வஞானிகளிற் சிறந்தவனாவான். இவன் பல ப்ரும்மர்ஷிகளுக்கும், அரசர்களுக்கும், தேவர்களுக்கும் ஞானோபதேசஞ்செய்வான்; ஸ்மிருதிகர்த்தாவாக ஆவான்; யோகசாஸ்திரத்தை இயற்றுவான். இவனுடைய மஹிமை உபநிஷத்துக்களாலும் கூறப்படுகின்றன. அதிகமாக வளர்த்துக் கூறுவதிற்பயனென்ன? வேதங்களால் நிரூபிக்கப்படும் பரமாத்மாவேஇவன். இவனே வேதாதிகாரியானபரமபுருஷன்; இவனைப்புத்திரனாகப்பெற்றமையால் நீர் இஷ்டஸித்தியைப்பெற்றவரானீர். ஆதலின் கிரமப்படி ஜாதகர்மம் முதலியவற்றைச்செய்வீராக" என்று இடியோசையோ, மேககர்ஜனையோ என்று ஐயுறுமாறு ஓர் அசரீரியானவாக்கு வானத்தினின்றும் உண்டாயிற்று.

## நாமகரணம்.

---

கேட்ட ப்ரும்மராதர் பேரானந்த முற்றார்; உரிய காலங்களில் ஜாதகர்மம் முதலியவற்றைச்செய்தார். 'கர்ப்பவாஸந்தொடங்கி இவன் எப்பொழுதும் ஆனந்தானுபவியாக இருக்கப்போகிறான்' என்பதை அனுபவத்தாலும், அசரீரவாக்காலும்; ஞானதிருஷ்டி

யாலும் அறிந்த ப்ரும்மராதர் பெரியோர்களுடைய அனுக்கிரஹத்தைப்பெற்று அச்சிறுவனுக்கு ஸானந்தர் என்று பெயரிட்டார். அந்த நாமகரண மஹோத்ஸவத்தில் கோதானம், அன்னதானம் முதலியவற்றைக் குறைவின்றிச்செய்து சிறப்பாகவும்கொண்டாடினார். அதன்பொருட்டுவந்திருந்த மஹர்ஷிகள் அச்சிறுவனுக்கு யாக்ஞவல்கியர் என்று பெயர் வைத்தார்கள்.*

## பாலலீலை.

---

பின்னர், ஸானந்தர் பெற்றோர்களும், மற்றோர்களும் கண்டு மகிழும் வண்ணம் பல பால லீலைகளைச் செய்யலானார். 'ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பத்னியாகிய பூமிதேவியின்மேல் தம்முடைய கால்கள் படலாகாது என்று கருதினரோ' என்று கண்டோர் நினைக்குமாறு தவழலானார். வேதங்களின் மணம் வீசுகின்ற வாய் நீர்த்திவலைகள் நிரம்பிய சரீரத்துடன் விளையாடுகின்ற ஸானந்தரின் மழலைச்சொற்களையும், குதலை மொழிகளையும் கேட்ட அனைவரும் பெரிதும் மகிழ்வுற்றனர்.

---

* யக்ஞம் என்பதற்கு யக்ஞத்தை நிரூபிக்கும் வேதமென்பது பொருள். வல்கியர் என்பதற்குச் சொல்பவர் அல்லது கண்டுபிடித்தவர் என்பது பொருள். ஆதலால் ப்ரும்மராதருக்கு யக்ஞவல்கியர் என்று பெயர் வந்தது. அவருடைய புத்திரராகையால் இவர் யாக்ஞவல்கியர் எனப்பட்டார்.

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்ட லின்பம் செவிக்கு"
"குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள்;
மழலைச்சொற் கேளா தவர்"

என்று வருகின்ற குறட்பாக்களின் கருத்துக்கள் இங்கே மிகப்பொருந்துவனவாக இருக்கின்றன. "குறுகுறு நடந்து சிறுகை நீட்டி—இட்டுந் தொட்டும் கௌவியும் துழந்தும்—மயக்குறு மக்களை இல்லோர்க்குப்—பயக்குறை இல்லைத்தாம் வாழுநாளே" என்ற வாக்குக்களின் அனுபவ இன்பங்களை ஸுனந்தா தேவியார், ப்ரும்மராதர் முதலாயினோர் ஸ்வயமாகவே அனுபவித்து மகிழ்ந்தனர்.

இவ்வாறாக, ஸானந்தர் வயதாக ஆகத்தத்தித் தத்திநடந்தும், சிறுதேருருட்டியும், சிற்றில் சிதைத்தும், அம்புலியை அழைத்தும், நீர்நிழல்களைக்கண்டும் பலவாறாக விளையாடிப் பெற்றோர்முதலாயினோர்க்கு இன்பம்விளைவித்தார். அக்கால் சக்கரம், சங்கம், த்வஜம், தாமரை ஆகிய உத்தமரேகைகளை உடைய அவருடைய பாதங்கள் பூமியிலே பதிவது பூமிதேவிக்கே ஓர் அலங்காரமாக இருந்தது என்பது மிகையாகாது.

## ப்ருஹஸ்பதியின் வருகை.

---

ஸானந்தருக்கு ஐந்தாவது வயது வந்தது. "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து—முந்தியிருப்

ப்ச் செயல்'' என்பது நீதிவாக்கியமல்லவா? ப்ரும்ம ராதர் தமது புத்திரனுக்கு வித்தைகளைக் கற்பிக்கக் கருதினர். ஸானந்தரது ஸூக்ஷ்ம புத்தியையும், நுட்பமான அறிவையும், நிமிஷந்தோறும் வளர்ந்து கொண்டேவரும் மேதாவிலாஸத்தையும் கண்டு மகிழ்ந் தார்; 'தேவர்களுக்கு ஆசார்யரான பிருஹஸ்பதி பக வானைக்கொண்டு அக்ஷராப்யாஸம், உபநயனம் முத லியவற்றைச்செய்விப்பது சிறந்ததாகும்' என்று எண் ணினர். பிருஹஸ்பதிபகவானைத்தியானம்பண்ணினர். உடனே பக்தியுடனும், விநயத்துடனும் மஹேந்திரன் முதலிய தேவகணங்களால் வணங்கப்பெறும் திருவ டித்தாமரைகளையுடையவரும், ஸமயத்திற்கேற்ப புதிதுபுதிதாக மேன்மேலும் தோன்றிக்கொண்டிருக் கும் மேதாவிசேஷங்களுள்ள புத்திமான்களுக்குச் சிறந்தவரும், தமது கடைக்கண் பார்வையாலேயே ஸ்வர்க்கலோகத்தின் யோகக்ஷேமங்களை நிர்வஹித்து வருபவரும், *பதினான்குவித்தைகளும், ஸதாசாரமும் ஒருங்கே சேர்ந்து ஓர் உருவெடுத்துவந்தாற் போன்ற வரும் ஆகிய பிருஹஸ்பதிபகவான் காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் ஆகிய ஆறு வகைச்சத்ருக்களையும் வென்ற ப்ரும்மராதரது ஆச் சிரமத்திற்கு வந்தார்.

---

* நான்கு, வேதங்கள், வியாகரணம், ஜ்யோதிஷம், நிரு க்தம், கல்பம், சிக்ஷா, சந்தஸ்என்ற அங்கங்கள் ஆறு, மீமாம்ஸை, ந்யாயம், தர்மசாஸ்திரம், புராணம் என்ற இவை பதினான்கு வித்தைகள்.

ப்ருஹஸ்பதியின் வரவைக்கண்ட ப்ரும்மராதர் பேரானந்தங்கொண்டார்; எதிர்கொண்டு சென்று வரவேற்றார்; விதிப்படி பூஜை முதலியவற்றைச்செய்தார்; பலவாறாகத்துதித்தார்; "தேவாசார்ய, தாங்கள் இங்கே நான் போற்றிப்புகழும்படி எழுந்தருளியது இந்தநிலம் செய்த தவமும் அல்ல; நான்செய்த நல்வினையின் பயனும் அல்ல; எனது குலம் செய்தபெரும் பாக்கியமேஆகும்" என்று கொண்டாடினார்; கைகூப்பி நின்றார்; தமது புத்திரராகிய ஸானந்தருக்கு அக்ஷராப்யாஸம் முதலியவற்றைச் செய்தருளவேண்டும் எனப்பிரார்த்தித்தார்.

## வித்யாப்யாஸமும்—உபநயனமும்.

---

இவ்வாறு செய்யப்படும் பிரார்த்தனையைச் செவியேற்ற பிருஹஸ்பதிபகவான் ப்ரும்மராதரை நோக்கி "ப்ரும்மர்ஷியே, உமது புத்திரனது மஹிமை வியக்கத்தக்கது. வாங்மயங்களெல்லாம் அவரால் அறியப்பட்டனவே. ஆயினும் உமது வேண்டுகோளுக்கு இணங்கி, உலகவழக்கத்தைப் பின்பற்றி நான் கிரமப்படி அக்ஷராப்யாஸம் முதலியவற்றைச்செய்து வைப்பேன். இவ்வளவு சிறந்த மேதாவியும், தெய்வத்தன்மைவாய்ந்தவனுமான சிஷ்யனைப்பெற்றஎனது பாக்கியம்கிடைத்தற்கரியதே" என்றுகூறிஸ்ரீமஹாவிஷ்ணுவின் திருவருளால் தாயின் கர்ப்பத்தில்இருக்கும்பொழுதே எல்லாவித்தைகளையும், ஞானங்களையும்

அறிந்துகொண்டவராகிய ஸானந்தருக்குப் 'பெரியோர் உலகக்ஷேமத்தின் பொருட்டுவழக்கங்களிற் குறைவில்லாமல் நடத்திக்காட்டுவர்' என்பதை அறிவிப்பவர்போல அக்ஷராப்யாஸம் முதல் உபநயனம் வரையில் செய்யவேண்டிய எல்லா ஸம்ஸ்காரங்களையும் க்ரமப்படி செய்து வைத்தார்; ஸானந்தரை ஆசீர்வாதம் செய்து கடாக்ஷித்தார்; ஸானந்தருடைய மஹிமைகளை விஸ்தாரமாக ப்ரும்மாதருக்கு எடுத்துக்கூறி அவரிடம் விடைபெற்றுத் தமது உலகத்திற்குச்சென்றார்.

## அத்யயனம்.

பின்னர், விருத்தவியாஸர் அந்த ஆச்சிரமத்திற்குவந்தார்; ஸானந்தருக்கு ரிக்வேதம் முதலியவற்றை அத்யயனஞ் செய்வித்தார்; * யஜுர்வேதாத்யயனத்தைச் செய்விக்கும்படி தமது சிஷ்யரான வைசம்பாயனருக்கு ஆக்ஞை செய்தார்; பூமண்டலப் பிரதக்ஷிணத்திற்குச்சென்றார்.

* யஜுர்வேதம் 101 சாகையுள்ளது. அதில் வைசம்பாயனர் சிஷ்யர்களுக்குச் சொல்லிக்கொடுத்தவை 27 சாகைகள். கடம்முதலிய 59 சாகைகள் விருத்த வியாஸரிடமே ஸானந்தரால் அத்யயனஞ் செய்யப்பட்டன. முதன்மையான 15 சாகைகள் ஸூர்யனிடம் வைக்கப்பட்டிருந்தன.

வைசம்பாயனர் விருத்தவியாஸருடைய உத்தரவைச் சிரமேற்கொண்டு தம்முடைய சிஷ்யர்களுடன் * ஸானந்தரைச்சேர்த்துக்கொண்டு கிரமப்படி அத்யயனத்தைச்செய்விக்கலானார்; அதிமேதாவியான சிஷ்ய லாபத்தை எண்ணி மகிழ்ந்தார். ஸானந்தரும் யஜுர் வேத ஸம்பிரதாயத்தை ஸ்ரீ வைசம்பாயனரிடம் கிரஹித்துக்கொண்டார்; ஆசாரியருக்கும் மேலாகத்தக்க அபூர்வமான நிலைமையை அடைந்து விளங்கினார். ஸானந்தருடைய மேதாவிசேஷத்தைப்பார்த்து "இவர் பிருஹஸ்பதிபகவானையும், சுக்கிராசார்யரையும் மேம்பட்டவராகக்காணப்படுகிறார்" என்று அறிஞர்கள் சொல்லிக்கொண்டார்கள்.

## நாரதர் மேருபர்வதத்திற்குச்சென்றது.

இந்த நிலைமையில், ஸகலமஹர்ஷிகணங்களுட் சிறந்தவரும், எல்லா உலகங்களிலும் ஸஞ்சாரம் பண்

---

* கர்ப்பத்திலேயேஸகலவாங்மயங்களும் ஸ்ரீமந்நாராயணனுடைய அனுக்கிரஹத்தால் ஸானந்தருக்குக்கிடைத்திருக்கின்றமையாலும், பிருஹஸ்பதி பகவானால் அக்ஷராப்யாஸம் முதலியவை செய்விக்கப்பெற்றமையாலும் மனுஷ்ய பாவனையை அனுஸரித்து ஸ்ரீவிருத்தவியாஸாதியரை ஆசாரியர்களாக அடைந்தது பகவதவதாரமானாலும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஸாந்தீபினியை ஆசார்யராக அடைந்ததுபோலாம் என்பது கருத்து.

னுபவரும், எப்பொழுதும் பகவானுடைய திவ்ய நாமங்களைக்கானஞ்செய்துகொண்டிருப்பவரும்,ப்ரும்ம தேவருடைய மானஸபுத்திரருமான நாரதமஹர்ஷி ஸ்ானந்தரது மஹிமையில் அதிக மகிழ்ச்சிகொண்டு மஹர்ஷிகளின் முன்பாக அந்த மஹிமைகளை வர்ணித்து ஆறுதல் அடைய விரும்பினர்; மேருபர்வதத்திற்கு ச்சென்றார்; அங்கே எல்லாத்தேவர்களையு மஹர்ஷிகளையும் வரவழைத்தார்; ஸானந்தருடைய எல்லா மஹிமைகளையும் வர்ணித்தார். கேட்டஅனைவரும் ஆனந்தக்கடலில் மூழ்கினர்.

பிறகு, ஸானந்தருடைய மஹிமைகளைக் கேட்டு மகிழ்ந்த மஹர்ஷிகள், தாங்கள் நாரதர் முகமாகக்கேட்டு மகிழ்ந்தபடி ஏனையமஹர்ஷிகள் பலருக்கும் ஸ்ரீஸானந்தருடைய மஹிமைகளைக்கூறி உத்ஸவங்கொண்டாடப்போவதாக நிச்சயித்து அதற்கு எல்லா மஹர்ஷிகளும் வந்தாகவேண்டும் என்பதாகவும், வாராதவர்கள் ஏழுதினங்களுக்குள் ப்ரும்மஹத்யா தோஷத்திற்கு உள்ளாகவேண்டும் என்பதாகவும் விளம்பரப்படுத்தியிருந்தார்கள்.

விளம்பரத்தைக்கண்ட பலரும்—எல்லோரும்—அந்த ஸமாஜத்திற்கு விஜயஞ்செய்தனர். ஸானந்தருடைய மஹிமைகள் இனிது விரித்துரைக்கப்பட்டன. எல்லாரும் மகிழ்வுற்றுத் தத்தம் இடங்களுக்குச்சென்றனர்.

## வைசம்பாயனரும்—ப்ருஹ்மஹத்யையும்.

---

ஆனால், அந்தமஹர்ஷிஸமாஜத்திற்கு ஸ்ரீவைசம்பாயனர் மாத்திரம் போகவில்லை. அதனால் மஹர்ஷிகள் விளம்பரப்படுத்தியிருந்தபடி ஸ்ரீவைசம்பாயனருக்குப் பிரும்மஹத்யாதோஷம் வரவேண்டியது அவசியமாயிற்று. ஒருநாள் வைசம்பாயனர் சிஷ்யர்களுக்கு அத்யயனஞ் செய்விக்குங்கால் அவரது ஸஹோதரியின் குமாரன் நடுவிலே சென்றான்* அதனை அத்யயனத்திற்கு விக்னமாகக்கருதிய வைசம்பாயனர் அவனை ஒரு தர்ப்பத்தால் தடுத்தார். தடுத்ததும் அவன் கீழேவிழுந்து இறந்தான்.

உடனே, மிக்க பயங்கரமான பெண் உருவத்தினையுடையதும்; சிவந்த கண்கள், கோரமான பற்கள் முதலியவற்றை உடையதும்; பிரளயகால ஸமுத்திரத்தின் கோஷம்போன்ற அட்டஹாஸக்குரலை உடையதும்; யமனைப்போன்றதும் ஆகிய §ப்ரும்ம

---

* 'அத்யயனகாலத்தில் ஸ்வரப்பிழையாகக்கூறியது கொண்டு தர்ப்பத்தினால் அடித்தார். அதனால் மரணமடைந்தான்' என்றும் கூறுவதுண்டு.

§ பிரும்மஹத்யையின் ஸ்வரூபத்தை மஹாபாரதம் சாந்திபர்வம் 288வது அத்யாயத்திலும், உத்தியோகபர்வம் ஒன்பதாவது பத்தாவது அத்யாயங்களிலும்' ஆனுசாஸனிக்பர்வம் ஒன்பதாவது அத்யாயத்திலும் காண்க.

ஹத்யையானது அக்னி ஜ்வாலைபோன்ற நாக்கை நீட்டிக்கொண்டு வைசம்பாயனரின் முன்னே வந்து நின்று அவரை அதட்டியது.) பின்னேநின்று துரத்தியது என்பர் சிலர்.)

## ஸானந்தர் ஆசார்யருடைய தோஷத்தை விலக்கியது.

---

கண்ட வைசம்பாயனர் அச்சங்கொண்டு சிஷ்யர்களைநோக்கி "குழந்தைகளே, நான் மஹர்ஷிகளின் ஸமாஜத்திற்குப்போகாமல் இருந்ததன் பயனாக எனக்கு வந்திருக்கும் துர்த்தசையைப்பாருங்கள். கோபத்தால் புத்திதடுமாறி மருமகனை அடித்துக்கொன்று கர்மசண்டாளனானேன். அதனால் பயங்கரமான பெண்ணுருவத்துடன்கூடிய இந்த ப்ரும்மஹத்யை என்னை ஆக்ரமிக்க யத்தனிக்கின்றது. அதற்குத் தகுந்த பிராயச்சித்தத்தைச்செய்து என்னை இந்தப் பாபத்திலிருந்து நீங்கள் காப்பாற்றுவீர்களாக" என்று கூறினர்.

இங்ஙனம் கூறக்கேட்ட சிஷ்யர்கள் 'எங்ஙனம் தங்களது ஆசாரியருக்குநேர்ந்த ப்ரும்மஹத்யையை விலக்கலாம்' என்பதை ஆராய்ந்து பார்த்தும் வழியறியாமையால் மௌனமாகவிருந்தார்கள். அக்கால், ஸானந்தர் "ஆசார்ய, இவர்களால் இந்தப்பாபத்தை நிவர்த்திசெய்ய இயலாது. நான் இப்பொழுதே நீக்கி

விடுவேன். தாங்கள் கவலைப்படவேண்டாம்'' என்று கூறினார்; தாம் விருத்தவியாஸ பகவானிடத்திலே கற்ற அதர்வமந்திரங்களின் மஹிமையைக்கொண்டு வைசம்பாயனரது அந்த பிரும்மஹத்யையை விலக்கினார். *

அப்பால், வைசம்பாயனர் ஸ்ரீ யாக்ஞவல்கியரது மஹிமையைக்கண்டு பொறாமைகொண்டார்; ஸானந்தரால் தமது தோஷம் நீக்கப்பட்டமையை உணர்ந்திருந்தும் அதனை மறைக்க விரும்பினார்; பிற சிஷ்யர்களை அழைத்துச்சிற்சில விருதங்களை அனுஷ்டிக்கச்செய்தார்; அவற்றால் தமது தோஷம் நிவர்த்தியாயிற்று என்பதாகப் பிரஸித்தியை உண்டுபண்ணினார்; அந்த சிஷ்யர்களுக்குச் சாகர்கள் என்ற புகழ்ப்

---

* ஸ்ரீவிஷ்ணுபுராணம், பாகவதம் முதலிய விடங்களில் வைசம்பாயனர் தமக்குநேர்ந்ததோஷத்தை விலக்கும்படி சிஷ்யர்களைவேண்டினர். யாக்ஞவல்கியர், மற்றவர்களால் முடியாததலின் தாம் விலக்குவதாகச்சொன்னார். அதனைக் கேட்ட் வைசம்பாயனர் கோபித்து "என்னிடம் அப்யஸித்த வேதத்தைக்கொடு என்று கேட்டார்'' என்று கதைகாணப்படுகிறது. வைசம்பாயனருடைய தோஷத்தை யாக்ஞவல்கியர் விலக்கியதாகக் காணப்படவில்லை. ஆனாலும் பிரஸ்தாவ கதம்பரத்னாகரம் முதலிய புஸ்தகங்களை அனுஸரித்து இப்படி எழுதப்பட்டது. மேலும் இப்படிச்சொல்வதே 'ஆசார்யனுடைய தோஷத்தைப்போக்கியவருக்கு நமஸ்காரம்' என்ற நாமாவலிக்கும்,ஸ்காந்தம் கோதாகண்டம்முப்பத்துமூன்றாவது அத்யாயத்திற்கும் ஒத்ததாகும்.

பெயரையும் அளித்தார். அது முதல் வைசம்பாயன ருக்கு ஸானந்தரிடத்திலே அஸூயை மேலிடத் தொடங்கியது.

## வைசம்பாயனரும்—ஜனகராஜனும்.

---

இவ்வாருக, ஒருநாள் வைசம்பாயனர் தம் முடைய சிஷ்யர்களை அழைத்தார்; "குழந்தைகளே, நாம் மிதிலாநகரத்து அரசனது ஆளுகையின்கீழ் வஸிக்கின்ருேம். அந்த அரசன் மிக்க பராக்ரம முள்ளவன்; மஹாதர்மிஷ்டன்; அவனுடைய பெருமை யால் நமது ஆச்ரமத்திலே சிங்கம், புலி முதலிய துஷ்டமிருகங்கள் புகுந்து உபத்திரவம் செய்யா மலிருக்கின்றன. அதனுல் நாம் ஸுகமாக வாழ்ந்து வருகின்ருேம். ஆதலின், நீங்கள் நாள் ஒன்றுக்கு ஒவ்வொருவராக ஒருமுறை ஏற்படுத்திக்கொண்டு அந்த அரசனது அந்தப்புரத்திற்குச்சென்று மந்திரா க்ஷதைகொடுத்து அரசனை ஆசிர்வாதம்செய்து வாருங்கள்" என்று அரசன் வேண்டுகோளின்படி கட்டளையிட்டார். ஆசாரியருடைய கட்டளைப்படியே சிஷ்யர்கள் முறையாக ஜனகமகாராஜனுடைய கிருஹஞ்சென்று மந்திராக்ஷதைகொடுத்து அரசன் முதலாயினுரை ஆசீர்வாதம் செய்துவந்தார்கள். அம் முறையில் ஸானந்தரது முறைநாள்வந்தது.

யாக்ஞவல்கியராகிய ஸானந்தர் அன்றைத் தினம் ஆசாரியரது கட்டளையை நிறைவேற்றவேண்டி

ஜனகமஹாராஜனுடைய கிருஹம்நோக்கிப்புறப்பட்டார்; ‘உமக்குச்சிஷ்யராக ஆகப்போகிற யாக்ஞவல்கியர் எங்கள் அரசனை அனுக்கிரஹம்பண்ணவருகிறார் என்பதை ஸூரியபகவானிடம் தெரிவிக்கக்கருதியனவோ’ என்று கண்டோர் நினைக்குமாறு வானமளாவி உயர்ந்திருக்கின்ற பிராகாரச்சுவர்களைக்கடந்தார்; அரசனுடைய மாளிகைக்குச்சென்றார்; பார்ப்பவர்களின் மனங்களைக் கவரக்கூடிய அழகிய ஸபாமண்டபத்திலே நுழைந்தார். அரசன் அப்பொழுது அவ்விடத்தில் இல்லை. அரசன் இல்லாதிருப்பதைக்கண்ட யாக்ஞவல்கியர் அவனது வருகையை எதிர்பார்த்துக் காத்திராமல் மந்திராக்ஷதைகளை அவ்விடத்திலே இறைத்துவிட்டு வந்தவழியே சென்றார். அந்த மந்திராக்ஷதங்களின் ஸம்பந்தத்தால் அங்குள்ள தூண்கள் தளிர்த்தன; சில புஷ்பித்தன.

இங்ஙனமாகச் சற்றுநேரத்திற்குள் அரசன் ஸபாமண்டபத்தை அடைந்தான்; தளிர்த்துப்புஷ்பித்திருக்கும் ஸ்தம்பங்களைக்கண்டான்; ஆச்சர்யப்பட்டான்; அங்கிருந்தவர்கள் முகமாக நடந்தசெய்திகளைத்தெரிந்துகொண்டான்; “இன்று மந்திராக்ஷதைகளைக்கொடுப்பதற்கு வந்த மஹர்ஷியையே எந்நாளும் அனுப்பவேண்டும்” என்று வைசம்பாயனருக்குத் தூதுவர்மூலமாகச்சொல்லியனுப்பினான். ஸேவகனும் வைசம்பாயனரிடம் வந்து அரசனது வேண்டுகோளை வணக்கமாகத்தெரிவித்தான்.

## வைசம்பாயனருடைய கட்டளையும் மறுப்பும்.

கேட்ட வைசம்பாயனர் யாக்ஞவல்கியரை நோக்கி "பிரும்மராதரின் புண்ணியராசியே, ஸானந்தைக்கு ஆனந்தத்தைக்கொடுப்பவனே, என்னுடைய சிஷ்யர்களுக்குட்சிறந்தவனே. ஸானந்த, உனது மந்திராக்ஷதையால் தூண்களும் புஷ்பித்தமையால் அரசன் உன்னிடம் மிக்ககௌரவபுத்தியுடன் இருக்கிறான்; ஒவ்வொருநாளும் மந்திராக்ஷதைகளைக்கொடுப்பதற்கு உன்னையே அனுப்புமாறு பிரார்த்திக்கிறான். நாம் அவனது தேசத்தில் வஸிப்பதால் அவனது இஷ்டப்படிநடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அரசன் திக்பாலகர்களுடைய அம்சமாகவும், மஹாவிஷ்ணுவின் அம்சமாகவும் சிறப்பிக்கப்படுகிறவனல்லவா? அவனுடைய கட்டளையை மீறலாகாது. ஆகலின், இனிமேல் நீயே ஒவ்வொருநாளும் அரண்மனைக்குச்சென்று அரசனை ஆசிர்வாதம்செய்துவரவேண்டும்" என்று கட்டளையிட்டார். (இன்று திரும்பவும் சென்று ஆசிர்வாதஞ்செய்துவரவேண்டும் என்று கட்டளையிட்டார் என்பர் சிலர்.)

உடனே ஸானந்தர் வைசம்பாயனரைநோக்கி "பகவன், ஜனகமஹாராஜனை அனுக்கிரஹிப்பதற்கு 'நாள் ஒன்றுக்கு ஒவ்வொருவராகச் சென்றுவரவேண்டும்' என்று முன்னம் கட்டளையிட்ட தாங்களே மீட்

டும் இப்படி உத்தரவிடுவது ஸரியா? க்ஷத்திரியனாகிய ஜனகன் ப்ராம்மணனாகிய என்னை அவமதித்தான். அரசனால் கொடுக்கப்படும் தக்ஷிணையில் எனக்கு ஆசையில்லை. *கௌபீனாச்சாதனமே எனக்குப்போது மானது. அரசனுடைய தக்ஷிணை முதலியவைகளுக்காக அரசன் சொல்படி நாம் நடப்பது ஸரியா? விருத்தவியாஸர் முதலியவர்கள் நம்மை நிந்திக்கமாட்டார்களா? நம்மால் அப்யஸிக்கபெற்ற வேதாந்த வித்யை வீணாகுமே. 'பணத்திற்கு ஆசைப்பட்டு வைசம்பாயனர் தமது சிஷ்யனை ஜனகரிடம் அனுப்புகிறார்' என்ற அபவாதம் தங்களுக்கு உண்டாகாதா? ஆகையால் அரசனுடைய தயவிற்காக வைராக்கியம் முதலியவைகளை விட்டுப் பணத்தாசைகொண்டு என்னையே அனுப்புவது ஸரியல்ல" என்று பலர் கேட்டிருக்க மறுமொழிகூறினார்.

## வைசம்பாயனர் வேதத்தைக்கொடுக்குப்படி கேட்டது.

---

அதனைக்கேட்டதும் வைசம்பாயனருடைய கண்கள் சிவந்தன. மனம்புழுங்கியது. கோபம்பொங்கியது. ஸானந்தரைநோக்கி "அட, தன்னைப்பண்டிதனாகக்கருதிக்கர்வங்கொண்டவனே, ஏன் இம்மாதிரி என்னை அவமதிக்கிறாய்? உன்னைப்போன்ற சிஷ்யனை இதுவரையில் நான் பார்த்ததில்லை. குருவின் உத்

---

* கௌபீனத்தை மறைக்கக்கூடிய வஸ்திரம்.

தரவை மீறுவதையே குருதக்ஷிணையாகக்கொடுக்க விரும்புகின்றாயே? நன்றாயிருக்கிறது உனது அடக்கமுடைமை! உனக்கு உபதேசஞ்செய்த எனது ஆசாரியத்தன்மையை நிந்திக்கவேண்டும். உன்னுடைய குணங்களை மற்றைச்சிஷ்யர்கள் கற்றுக்கொள்ளலாகாது. என்னிடம் அத்யயனஞ்செய்த வேதத்தைக் கொடுத்துவிட்டு இவ்விடமிருந்து செல்வாயாக" என்று கூறினார்.*

---

* 'ஸாதுக்களும் உலகத்தின் உபகாரநிமித்தம் தூஷிக்கத்தகாதவனையும் தூஷிப்பார்கள்' என்றபடி வைசம்பாயனர் ஸாதுவானாலும், எல்லாவற்றையும் அறிந்தவராகையால் வெகுகாளாகவே மனத்தில் யோசிக்கலானார்:— "யஜுர்வேதமோ 101 சாகையுள்ளது. அவைகளில் பதினைந்து சாகைகள் ஸூர்யபகவானிடம் வைக்கப்பெற்றிருக்கின்றன. மும்மூர்த்தி முதலியோர்கள் அந்த வேதாநுஷ்டானமுள்ளவர்கள். அந்த வேதபாகத்தை நாமறியவில்லை. அதை உலகில் பிரசாரஞ்செய்யவேண்டியது அவசியம். அதை மிக்க புத்திமானாகிய சிஷ்யனைக்கொண்டு செய்யவேண்டும். அதைப்பூமிக்குக்கொண்டுவரத் தகுதியுள்ளவன் இவனேயாம். ஆகையால் இவன் நம்மிடமே சிஷ்யனாகவிருந்தால் அந்த வேதத்தைப் பூமியில் பரவச்செய்ய முடியாது. ஆனதுபற்றி இவனை வெளியில்விடவேண்டும்" என்று யோசித்துத் தமது கட்டளையை மீறினான் என்ற காரணத்தை வியாஜமாகக் கொண்டு 'என்னிடம் கற்றவேதத்தைக் கொடுத்துவிடு' என்று கேட்டார். (பிரஸ்தாவகதம்பாநுகாரத்தையும், ஸ்காந்தம் சங்கர ஸம்ஹிதை நாகரகண்டத்தையும் பார்க்க.)

## ஸ்ரீயாக்ஞவல்கியர் வேதத்தைக்கொடுத்தது.

---

கூறலும், ஸானந்தர் மனவருத்தமுற்று 'ஆசாரியரது கட்டளைப்படி செய்வதே உசிதமானது. அன்றியும், நற்குணமில்லாதவரிடம் அத்யயனஞ்செய்வதும் உசிதமற்றது' என்று எண்ணிக்கொண்டார்; தமது யோகபலத்தால் தம்முடன் அத்யயனஞ்செய்த முனிவர்களின் வேதத்தையும் ஆகர்ஷித்துக் கக்கிவிட்டார். இவை அனைத்தையும் நேரிலேபார்த்துக்கொண்டிருந்த ஸேவகன் நடந்தபடி அரசனிடத்திலே தெரிவித்தான். அரசன் முதலாயினோர் ஆச்சரியமுற்றனர்.

[முன்னொருகாலத்தில் யாக்ஞவல்கியர், சாகல்யர் என்பவரிடம் (ரிக்வேதம்) அத்யயனஞ்செய்துகொண்டிருந்தார். அவரது ஆச்ரமத்திற்கு ஸமீபத்திலே ஸுப்ரியன் என்ற ஸூரியவம்சத்து அரசன் ஒருவன் வந்து ஒருவிரதக் காரணமாகச் சிலநாட்கள் அங்கேதங்கியிருந்தான். தங்கியிருந்த அவன் சாகல்யரைநோக்கி "நான் இங்கே இருக்கும்வரையில் எனக்குப் புரோஹிதராகவிருந்து பௌஷ்டிகசாந்தியைப் பிரதினமும் செய்வித்து அனுக்கிரஹித்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதற்கு உடன்பட்ட சாகல்யர் தம்முடைய சிஷ்யர்களை அழைத்து நாள் ஒன்றுக்கு ஒவ்வொருவராக அந்த அரசனது அந்தப்புரத்திற்கு அனுப்பிவந்தார். சிஷ்யர்களும் தங்கள் தங்களது முறைப்படியேசென்று

ஹோமம் முதலியவற்றைச்செய்து அரசனை ஆசீர்வதித்துவந்தார்கள். அம்முறையில் யாக்ஞவல்கியரது நாள்வந்தது. அன்றைத்தினம் யாக்ஞவல்கியர் முறைப்படிசென்று விதிப்படி செய்யவேண்டியவற்றைச் செய்து மந்திரதீர்த்தத்தையும், அக்ஷதங்களையும் எடுத்துக்கொண்டு அரசனை எதிர்பார்த்துநின்றார். அரசன் சிறிது அலட்சியக்குறிப்புடன் "நான் அசுத்தனாக இருக்கிறேன்; இந்த ஸ்தம்பத்தில் ஜலத்தைக் கொட்டும்; அக்ஷதங்களை இறையும்" என்று சொன்னான். கேட்ட யாக்ஞவல்கியர் கோபங்கொண்டு மந்திரதீர்த்தத்தை ஸ்தம்பத்தின்மீதுகொட்டி, மந்திராக்ஷதங்களை இறைத்தார். உடனே அந்த ஸ்தம்பம் பூத்துக் காய்த்துப் பழுத்தது. அதைக்கண்ட அரசன் பயங்கொண்டு முனிவரைவணங்கித் 'தனது பிழையைப்பொறுத்தருளுமாறு வேண்டிக்கொண்டதுடன் மீட்டும் ஒருமுறை கிரமப்படி ஜப, ஹோமாதிகளைச் செய்து மந்திரதீர்த்தத்தால் தன்னை அபிஷேகம் செய்வித்து அனுக்கிரஹிக்கவேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டான். கேட்டமுனிவர் அரசனை நோக்கி "மன்னவ, 'நான் ஒருமுறை தான் இம்மாதிரியான ஹோமாதிகளைச்செய்யலாம். மறுமுறை செய்யலாகாது' என்பது பிரும்மதேவரது கட்டளையாகும்" என்றுசொல்லி அரசனது வேண்டுகோளுக்கிணங்காமல் ஆசார்யரது ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தார். அரசனும் சாகல்யரது ஆச்சிரமத்திற்குவந்து நடந்தவற்றைச்சொல்லியதுடன் 'யாக்ஞவல்கியரையே பிரதி

தினமும் அனுப்பிவரவேண்டும். வேண்டியபொருள்களையும் அளிப்பேன்' என்றும் கூறினன்; மன்றாடிக் கேட்டுக்கொண்டான். உடனே அரசனது வேண்டுகோளுக்கிணங்கிய சாகல்யர் யாக்ஞவல்கியரை நோக்கி "குழந்தாய், எனது வார்த்தையை தட்டாதே. அரசனதுவிருப்பத்தைப்பூர்த்திசெய்துவைப்பாயாக" என்று பலவாகக்கூறினர். எவ்வளவுகூறியும் யாக்ஞவல்கியர் அரசனது அரண்மனைக்குச்செல்ல ஸம்மதிக்கவில்லை. கேட்ட சாகல்யர் மிக்க கோபங்கொண்டு "ஸானந்த, நீ குருவாகிய எனது கட்டளையை மீறுவதால் இனி என்னிடம் இருத்தலாகாது வெளியிற்சென்றுவிடு" என்று கட்டளையிட்டார். அவ்வாறே யாக்ஞவல்கியர் அவ்விடத்தைவிட்டு அகன்றார்; ஸூரியனை உபாஸித்து அவரிடத்திலிருந்து ஸௌரஸூக்தங்கள் முதலிய பலவற்றையும் அத்யயனஞ்செய்தார். பின்பு இவருடைய மஹிமையைக்கண்டு சாகல்யர் 'ஸௌரஸூக்தங்களை உபதேசிப்பதே தமக்குக் குருதக்ஷிணையாகும்' என்று வேண்டிக்கொள்ள யாக்ஞவல்கியர் தம்மால் பிரதிஷ்டைசெய்யப்பெற்ற பன்னிரண்டு ஆதித்திய பிம்பங்களுக்கு எதிரில் சாகல்யருக்கு ஸௌரஸூக்தங்களை உபதேசித்தார். இவற்றை நேரில் பார்த்துக்கொண்டிருந்த மஹர்ஷிகள் அனைவரும் அபூர்வமான அந்த ஸூக்தங்களைக்கேட்டு ஆச்சரியமடைந்தனர்; யாக்ஞவல்கியரை நோக்கி "ஏ, அந்தணச்சிரேஷ்ட, உமது சிறந்த செய்கையைக்கண்டு நாங்கள் பெருமகிழ்

வுற்றோம். உமது மஹிமை வியக்கத்தக்கது. உமக்கு எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வரமிருந்தால்மேலும் தவறாது கொடுப்போம்'' என்று கூறினர். கூறுதலும், யாக்ஞவல்கியர் மஹர்ஷிகளை நோக்கி, ''பெரியோர்களே, தவச்சிரேஷ்டர்களே, தாங்கள் கருணைகூர்ந்து வரங்கொடுப்பதாயின் அடியேன் ஒன்றைவேண்டிக்கொள்கிறேன். அது 'இந்தப்பன்னிரண்டு ஸூர்யபிம்பங்களுக்கு எதிரிலே நின்று இப்பொருளை என்னால் கூறப்பட்ட அந்த ஸூக்தங்களைப்படிக்கிறவர்கள் எல்லாப்பாபங்களிலிருந்தும் விடுபடல்வேண்டும்; இந்தலிங்கமும் என் பெயரால் விளங்கவேண்டும் என்பது' என்றுவேண்டிக் கொண்டார். உடனே, அந்த மஹர்ஷிகள் ''கலியில் வேதாத்யயனமே அரிதாகிவிடும்; பாபம் வளரும் என்பவற்றை அறிந்து ஜனங்களிடம் பரமகருணையுடன்நீர் கேட்டுக்கொண்டது உசிதமே. ஆதலின் நீர் கேட்டுக்கொண்ட அந்த இரண்டுவரங்களையும் தந்தோம்'' என்று கூறியதுடன், வேறு பல இனிய மொழிகளையும்கூறி யாக்ஞவல்கியரைப் பலவாகத் துதித்துத் தத்தம் இடங்களுக்குச்சென்றார்கள். இஃது ஒருவரலாறு. ஸ்காந்தம்.]

## தைத்தரீயம்.

---

இப்படி ஸானந்தரால் கக்கப்பெற்ற வேதம் அக்னிபோல ஜ்வலித்துக்கொண்டிருந்தது. வைசம்பாயனர் முதலாயினோர் 'இன்னது செய்வது' என

அறியாமல் திகைப்புற்று மோஹித்து நிற்கின்றனர். இந்நிலையில், பூமண்டலத்தைச்சுற்றிவருகின்றவிருத்த வியாஸபகவான் அவ்விடத்திற்கு வந்துசேர்ந்தார்; நடந்தவற்றைத் தெரிந்துகொண்டார்; கமண்டலத்திலிருந்த தீர்த்தத்தால் வைசம்பாயனருடைய சிஷ்யர்களாகிய ஆபஸ்தம்பர் முதலிய மஹர்ஷிகளின்மீது புரோக்ஷித்தார்; தித்திரிபக்ஷிகளாகச்செய்தார்; கக்கப்பெற்றவேத மஹாக்கினியைப்புஜிக்கும்படி செய்தார். அவர்களும் புஜித்தார்கள். அதனால் அந்த வேதத்திற்குத் தைத்தரீயம் என்று பெயர் உண்டாயிற்று.*

---

* ஸானந்தரால் கக்கப்பெற்றவேதபாகத்தை ஆபஸ்தம்பர், போதாயனர், ஔக்கியர், காண்டிகர், கடர், துபுகர், ஸத்யாஷாடர், பாத்வாஜர், விகஸர் முதலியவர்கள் புஜித்தார்கள். ஒருவரால் கக்கப்பெற்றதை மற்றவர் புஜிப்பது தகுமா? என்று ஸம்சயிக்கவேண்டாம். விருத்தவியாஸர், வைசம்பாயனர் இவர்களுடைய கட்டளையால் புஜித்தார்கள். பெரியோர்கள் தகாதகார்யத்தைச்செய்யும்படி தூண்டுவார்களா? தூண்டமாட்டார்கள். ஸ்ரீநாராயணன் இராமாவதாரத்தில் சபரியால் ஸமர்ப்பிக்கப்பெற்ற பழங்களைப் புஜிக்கவில்லையா? அவை உச்சிஷ்டமானவையல்லவா? சிறந்த மஹர்ஷிகள் யாகத்தில் ஸோமபானஞ்செய்யவில்லையா? சிறந்த வஸ்துக்களுக்குஉச்சிஷ்டமில்லை, விதியாலும், பக்தியாலும், பெரியார்களுடைய கட்டளையாலும் வஸ்துக்கள் சுத்தமாகின்றன, உண்மையில் வேதங்களுக்கு எந்த நிலையிலும் அசுத்தி இல்லை. [பிரஸ்தாவ கதம்ப ரத்னாகரம் 3வது பாகம்.]

## ஸாநந்தரும் காயத்திரியும்.

பின்னர் ஸாநந்தர், ஸகல பாபங்களையும் போக்கக்கூடிய கங்காநதியிலே ஸ்நானம் செய்தார்; ஸ்ரீ மஹாவிஷ்ணுவை நினைத்தார்; எல்லா வேதங்களுக்கும் மாதாவும், தன்னை ஜபிக்கும் ஜனங்களைக் காப்பவளும், இருபத்துநான்கு அக்ஷரஸ்வரூபியாக விளங்குபவளும் ஆகிய காயத்திரியை மிக்க பக்தியுடன் தியானஞ் செய்யலானார்.

இவ்வாறு பலநாட்கள் தியானஞ்செய்ய ஒருநாள் காயத்திரி ஸாநந்தருக்குத் தனது திவ்ய உருவத்தைக்காண்பித்தாள். அவள் அக்னி,ஸூரியன், சந்திரன் ஆகிய மூன்று கண்களையும், சங்கம், சக்கிரம் பாசம், கதை, அங்குசம், கபாலம், இருதாமரைப் பூக்கள் ஆகியவற்றைமுறையே தரித்துக்கொண்டிருக்கின்ற கைகளையும் உடையவளாகக்காணப்பட்டாள். இங்ஙனம் தம்முன்னேதோன்றிக் காக்ஷியளிக்கும் காயத்திரீதேவியைக்கண்ட ஸாநந்தர் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணினார்; வேதவாக்கியங்களால் துதித்தார்; "பகவதீ, உலகமாதா, நான் ஒரு காரணத்தால் ஆசாரியாது கோபத்திற்கு உள்ளானேன்; அவரது கட்டளைப்படியே அவரிடம் அத்யயனஞ் செய்த வேதத்தைக் கக்கிக்கொடுத்துவிட்டேன். இனி, தம்மைத்தவிர எனக்குச்சரணம் வேறு இல்லை. ஆதலின், வைசம்பாயனருக்குத் தெரியாத வேதங்

களையும் தமது அனுக்கிரஹத்தால் அடைய விரும்புகின்றேன்" என்று பிரார்த்தித்தார்.

ஸானந்தருடைய இந்த வார்த்தைகளைக்கேட்ட காயத்திரிதேவி கருணைநிரம்பிய கடைக்கண்பார்வையால் ஸானந்தரை அனுக்கிரஹஞ்செய்து "ஏ, குழந்தாய், ஸானந்த, அஞ்சாதே தாயின் கர்ப்பத்திலேயே ஸ்ரீமந் நாராயணனது மஹோபதேசத்தைப்பெற்ற உனக்கு என்னகுறை? மேலும், நீயோ பிருஹஸ்பதி, விருத்தவியாஸர் முதலியவர்களது பிரஸாதங்களையும் பெற்றிருக்கிறாய். இவற்றிற்கு அடையாளமாக ஆசார்யருக்குநேர்ந்த தோஷத்தையும் போக்கியுள்ளாய். இத்தகைய உனக்கு எதுதான் கிடைக்கமாட்டாது? நிற்க, முன்னொருகால் நைமித்திகப் பிரளயத்திலே 'ஸோமகன் என்ற அஸுரன் பிரும்மதேவரிடமிருந்து வேதங்களை அபஹரிப்பான்' என்பதை அறிந்து ஸூர்யபகவானிடம் முன்னமேயே யஜுர்வேதத்தின் ஒருபாகம் வைக்கப்பட்டுள்ளது. அஃது அயாதயாமம் எனப்படுவது; ஸோமகாதிகளால் அபஹரிக்கப்படாதது; வைசம்பாயனரால் அறியப்படாதது. ஆகையால் நீ ஸூரியபகவானை ஆராதித்து அவருடைய அனுக்கிரஹத்தால் அந்த வேதத்தை அடைவாயாக. இனி ஸூரியனைக் குறித்து உபாஸனைசெய்" என்று கட்டளையிட்டு மறைந்தார்.

## ஸானந்தர் ஸூரியனிடம் உபதேசம் பெற்றது.

---

காயத்திரிதேவியின் அனுக்கிரஹத்தையும், கட்டளையையும் பெற்ற யோகீச்வரராகிய யாக்ஞவல்கியர் ஸூரியனை ஆராதித்து அவரது பிரஸாதத்தை அடைய விரும்பினர்; பரிசுத்தமான ஸ்தோத்திரங்கள் பலவற்றைச்செய்தார்; ஸூரிய பகவானே, சாயாதேவியின்பதியே, வேதஸ்வரூபியே, நான் வைசம்பாயனரிடம் அத்யயனஞ்செய்த வேதத்தைக் கக்கிவிட்டேன். வைசம்பாயனருக்குத் தெரியாத யஜுர்வேதத்தை எனக்கு உபதேசம் பண்ணி மற்றைத் தாமரைப்பூக்களைக் கிரணங்களால் மலர்த்துவதுபோல எனது ஹிருதய கமலத்தையும் மலரச் செய்தருள்வீராக" என்று வேண்டிக்கொண்டார்.

வேண்டலும், ஸூரியபகவான் மிக்க ஸந்தோஷங்கொண்டு "பிராம்மண, என்னிடம் வேதங்கள் இருப்பதை நீர் எப்படி அறிந்துகொண்டீர்? அதனைச் சொல்வீராக" என்று வினவினர்.

வினவப்பெற்ற ஸானந்தர் தமது வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்று மகிழ்ந்தவராகி ஸூரியபகவானைநோக்கி "ஸ்வாமியே, ஸ்ரீமந்நாராயணரது வலதுகண்ணாக விளங்கும் தங்களுக்குத் தெரியாத விஷயமும் உளதோ? ஒன்றையும் அறியா

தவர்போலத் தாங்கள் என்னை இப்படிக்கேட்பது லீலையின் பொருட்டேயாகும் என்று கருதுகின்றேன். இதுவும் என்மீதுள்ள கருணையேயாகும். ஆயினும், தங்களது உத்தரவின்படியே தெரிவிக்கிறேன். நான் மாதாவின் வயிற்றிலே கர்ப்ப வாஸம் பண்ணிக் கொண்டிருக்குங் காலத்தில் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியானவர் எனக்கு மாயையின் உபத்திரவம் நேரிடா வண்ணம் அனுக்கிரஹித்துப் பிரும்மோபதேசத்தையும் செய்தார் அதனால் வேதமாதாவாகிய காயத்திரீ தேவி என்னிடம் கிருபை கூர்ந்து தங்களிடம் வேதங்கள் இருக்கின்றவரலாற்றைக் கூறித் தங்களைப்பிரார்த்திக்குமாறு திருவாய் மலர்ந்தருளினர். அதன்படியே அடியேன் தங்களைச்சரணமடைந்தேன். எனக்குத் தங்களிடமிருக்கும் வேதங்களைக் கற்றுக் கொடுத்தருளல்வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்.

உடனே, ஸூரியபகவான் யாக்ஞவல்கியரை நோக்கி “ஸ்ரீமந்நாராயண பௌத்திர, மஹேந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய அஷ்டதிக் பாலகர்களும், நானும் அந்த பரமாத்மாவின் ஆக்ஞையைத் தலைமேலே தாங்கியவர்களாய் எங்களுடைய வேலைகளைச் செய்து வருகின்றோம். எங்களுடைய வேலைகள் சிறிதும் தடைப்படலாகாது. தடைப்படுமாயின் ஸர்வேச்வரன் சிக்ஷிப்பார். ஆகையால் எனக்கு ஒருக்ஷணம்கூட ஓரிடத்திலிருந்து அத்யயனஞ் செய்விக்க ஒழிவில்லை. என்றாலும், உமக்கு ஓர்உபாயத்தைச்சொல்லுகிறேன்.

வாயைத்திறப்பீராக. உமது முகத்தில் ஸரஸ்வதி—காயத்திரி என்று சில கிரந்தங்கள் கூறுகின்றன—பிரவேசிப்பாள்" என்றனர். அப்படியே ஸானந்தர் வாயைத்திறந்தார். ஸரஸ்வதி பிரவேசித்தாள். பிரவேசித்தலும் ஸானந்தருடைய சரீரத்தில் மிக்க உஷ்ணமுண்டாகியது. அதனைப்பொருக்க இயலாமல் ஸானந்தர் வருத்தமடைந்தார்.

ஸானந்தரது துன்ப நிலைமையைக்கண்ட ஸூரியபகவான் "பிராம்மணோத்தம, இந்தத்தடாகத்திலே ஸ்நானம் செய்வீராக. இதனுள் ஸௌர மந்திர பீஜங்கள் ஸ்தாபிதம் செய்யப்பெற்றுள்ளன" என்று சொன்னார். ஸானந்தரும் ஸூரியபகவானது கட்டளையின்படியே அந்தத்தடாகத்திலே ஸ்நானஞ் செய்து கரையேறினார். உடனே சரீரத்திலிருந்த தாபம் நிவர்த்தியாயிற்று. மனம் தெளிவுற்றது. ஸௌரஸூக்தங்கள் தோன்றின. தோன்றலும், ஸானந்தர் அந்தத்தடாகத்தின் கரையிலே பன்னிரண்டு ஆதித்யபிம்பங்களையும் பிரதிஷ்டைசெய்தார். அவற்றின் முன்னேநின்று ஸௌரஸூக்தங்களைச் சொல்லி ஸ்தோத்திரஞ்செய்தார். கண்டமஹர்ஷிகள் பலரும் அங்கேவந்து அந்த அபூர்வமான ஸூக்தங்களைக்கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்து ஸானந்தரைச் சிலாகித்தனர். [ஸ்காந்தம்,]

ஸௌரஸூக்தங்களால் துதிக்கப்பெற்று மகிழ்வுற்ற ஸூரியபகவான் யாக்ஞவல்கியனை

நோக்கி "பிராம்மணோத்தம, ஸ்ரீமந் நாராயண பௌத்திர, திக்பாலகர் முதலிய எங்களுடைய வேலைகளின் அவசியத்தையும், அவற்றின் தடையால் உண்டாகும் கஷ்டங்களையும் நான் முன்னமே உமக்குத் தெரிவித்துள்ளேன். எனினினும், உமக்கு வேதாத்யயனம் செய்வித்தற்பொருட்டு ஓர் உபாயத்தைக் கூறுகிறேன். கவனமாய்க்கேட்டு அதன்படி நடப்பீராக. 'ஸமுத்திரத்தின் நடுவில் படபா என்ற பெயருடன் ஓர் அக்னி தங்கியிருக்கின்றது. அதனிடம் எனது வம்சத்தில் உண்டான குதிரைகளிருக்கின்றன. * அவற்றைக் கொண்டுவருவீரானால் நான் உமக்கு வேதாத்யயனத்தைச் செய்விக்கிறேன்' என்

---

* முன்னொருகாலத்தில் ஸூரியபகவானது மனைவியான ஸம்க்ஞா என்பவள் அவரது தேஜஸ்ஸை ஸஹியாமல் தனது நிழலைப் பெண்ணுருவாகச்செய்து ஸூரியனிடம் வைத்துவிட்டுத் தன்பிதாவின் வீடுசென்று ஸூர்யனுடைய காந்தி பொருக்கமுடியவில்லையாதலால் இவ்விடம் வந்தேன் என்றாள். தகப்பனாகிய த்வஷ்டா, "பெண்ணே, புருஷனை விட்டுப் பிரிந்திருப்பது குலஸ்திரீகளுக்குத் தகாதகார்யம் ஆனதுபற்றி கணவனிடம்செல்லு" என்று அனுப்பினர். ஆகிலும் அவள் ஸூர்யனுடைய தேஜஸ்ஸுக்குப் பயந்து ஸமுத்திரத்திலுள்ள ஒருதிட்டை அடைந்து பெண் குதிரை வடிவம்பூண்டு விளையாடிக்கொண்டிருந்தாள். சிறிது காலத்திற்குப்பிறகு ஸூரியபகவான் சாயையின் முகமாக அதனைத் தெரிந்துகொண்டு குதிரை உருவத்துடன் ஸம்க்ஞை இருக்குமிடத்திற்கு வந்து அவளுடன் வஸித்துவந்தார். அப்பொழுது மிக்க தேஜஸும், வேகமுங்கொண்ட குதிரை வடிவமான புத்திரர்கள் தோன்றினர்கள். ஸூரியன் அவற்றைப் படபாக்கினியிடம் அடைக்கலமாகவைத்தார் என்பது புராண கதை.

படுதே அஃதாகும்'' என்று அவரைப் பரீக்ஷிப்பதற்காகக்கூறினர்.

கூறுதலும், யாக்ஞவல்கியர் பூமிதேவியின் வஸ்திரம் போலிருக்கும் ஸமுத்திரத்தினிடம் சென்றார்; அதன் மத்தியில் அதிக ஜ்வாலாமாலைகளுடன் பிரகாசித்துக்கொண்டிருக்கும் படபாக்கினியைக்கண்டார்; பலவாறாகத்துதித்தார்; தாம் ஸூரியபகவானல் அனுப்பப்பட்டு வந்த வரலாற்றைத் தெரிவித்தார்; ஸூரியபகவானுடைய குதிரைகளைத் தந்தருளுமாறு கேட்டுக்கொண்டார். உடனே படபாக்கினி பெருமகிழ்வுற்று மிக்க தேஜஸ்வாய்ந்தவையும், வேகமுள்ளவையும், அச்வினீதேவர்களுக்கு ஸமோஹாதாமுறையினைஉடையவையும், தன்னிடம் வைக்கப்பட்டவையுமான அந்தக்குதிரைகளை ஸானந்தரிடம் கொடுத்தது. பெற்ற ஸானந்தர் பேரானந்தமுற்றுக் குதிரைகளுடன் ஸூரியபகவானை அடைந்து வணங்கி நின்றார்.

கண்ட ஸூரியபகவான் ஆச்சர்யக் கடலில் மூழ்கியவராய் மகிழ்ந்தார்; ஸானந்தரால் கொண்டுவரப்பட்ட உத்தமமான குதிரைகளுக்குப்பொருந்திய ஒரு ரதத்தை உண்டுபண்ணினர்; அக்குதிரைகளை அந்தரதத்திலே பூட்டினர்; ஸுனந்தையின் புத்திரராகிய ஸானந்தரை அதில் அமர்த்தினர்; 'இரண்டு ஸூரியர்கள் ஸஞ்சாரம் பண்ணுகின்றார்களோ' எனத் தேவர்களும் மஹர்ஷிகளும் ஆச்சரியப்படு

மாறும், ஒவ்வொருநாளும் ஸூரிய கதியைத்தடுக்கும் மந்தேஹ என்ற கணம் 'பரமாத்மாவால் ஸூர்யனுக்கு ஸஹாயமாகச் செல்லுதற்பொருட்டு வேறொரு ஸூரியனும் படைக்கப்பட்டுள்ளானோ' என்று நினைத்து அஞ்சுமாறும், ஸமானவேகத்துடன் தமது ரதத்துடன் தொடர்ந்து வருமாறும் செய்தார்; அயாதயாமமான யஜுர்வேதத்தையும், மற்றுள்ள ரஹஸ்யங்களையும், லோகத்திலே பிரஸித்தமாகாத பல ரஹஸ்யஸ்தோத்திரங்களையும், மந்திரங்களையும் ஸானந்தருக்குச் சிறிதும் குறைவின்றி உபதேசித்தார்.*

## யாக்ஞவல்கியர் பூலோகத்திற்கு வருதல்.

இவ்வாறு ஸ்வல்பகாலத்திற்குள் ஸூரிய பகவானிடமிருந்து வைசம்பாயனருக்குத் தெரியாத §யஜுர்வேதத்தையும், பலஸூக்தங்களையும், மந்திர

---

* யக்ஞோபவீதகண்டம் 11-வது கண்டத்தில் யாக்ஞவல்கியர் ஸூர்யனிடமாக அத்யயனஞ் செய்தவைகளின் விபரத்தைப்பார்க்கவும்.

§ லகிமா என்ற வித்யையை யாக்ஞவல்கியருக்கு உபதேசித்து அதனால் இலேசானவராக்கியும் தமது தேஜஸ்ஸால் அவருக்கு அபாயம் உண்டாகாமலிருக்கக் குதிரைகளின் காதுகளில் வஸிக்கச்செய்தும் உபதேசித்தார் என்றும் சில புராணங்கள் கூறுகின்றன.

ங்களையும், ஸ்தோத்திரம் முதலிய வற்றையும் பாக்கி யின்றி அத்யயனஞ்செய்து ஒப்பற்ற வாக்விலாஸத் தைப்பெற்ற ஸ்ரீயாக்ஞவல்கியர் ஸூரியபகவானிடம் விடைபெற்றுப் பூலோகத்திற்குப் புறப்பட்டார்.

## யாக்ஞவல்கியரும்—சித்திரரதனும்.

அப்பால், சித்திரரதன் என்ற ஒரு கந்தர்வ ராஜன் யாக்ஞவல்கியரிடம் வந்தான்; வந்தனை வழி பாடுகளைச் செய்து வணங்கினான்; "பிரும்ம வித் துக்களுட் சிறந்தவரே, தாங்கள் ஸூரியபகவா னிடத்திலே கற்ற அனைத்தையும் எனக்குக் கற்பித் தருளல்வேண்டும். அன்றியும், என்னுடைய வினாக் களுக்கும் தக்கவாறு விடையளித்து என்னைத் திருத்தி யருளல்வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்; யாக்ஞவல்கியரது அனுமதியின்மேல் தன்னுடைய வினாக்களையுங் கூறலரானான்.

"ஸ்தாவர ஜங்கம ஸ்வரூபமான இந்த ஜகத் திற்கு எது நிமித்த காரணம்? உபாதான கார ணம் எது? வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், மற்றுமுள்ள வாங்மயங்கள் என்ற இவை எதனைப் பிரதிபாதிக்கின்றன?" என்பன அவற்றுள் முக்கிய மானவையாகும்.

இவ்வினாக்களைக்கேட்ட ஸானந்தர் மிக்க ஸந் தோஷங்கொண்டு சித்திரரதனை நோக்கி "கந்தர்வ

ராஜனே, ஸ்தாவர ஜங்கம ஸ்வரூபமான இந்த ஜகத்திற்குப் பரமாத்மாதான் அபின்ன நிமித்தோபாதான காரணராவர். வேதம் முதலிய எல்லா வாங்மயங்களும் அவரையே நிரூபிக்கின்றன" என்று பல பிரமாணங்களுடன் விளக்கிக் காட்டினர். கேட்ட கந்தர்வராஜன் ஆச்சரியமடைந்து பேரானந்தமுற்று அவரையே சரணமாகக் கொண்டான்; உபதேசம் பெற்றான்; ஸானந்தருக்குச் சிஷ்யனாகவும், ஸூரிய பகவானுக்குப் பிரசிஷ்யனாகவும் ஆனமையைக் கருதி மனமகிழ்ந்திருந்தான். [மஹாபாரதம் சாந்திபர்வம் அத்யாயம் 323]

## கோதாவரி தீரத்தில் வஸித்தல்.

இப்பால், யாக்ஞவல்கியர் 'புண்ணிய சீலர்கள் நல்லுலகத்திற்குப் போகத் துணையாமாறு உயர்கின்றனவோ' என்று கண்டோர் கருதும் வண்ணம் கிளம்புகின்ற அலைகளை உடையதும், 'தன்னை அண்டியவர்களுக்குப் பிற குணங்களின் கலப்பின்றி ஸத்வ குணத்தைமாத்திரம் கொடுப்பேன்' என்று கூறுவதுபோன்ற வெண்மையான நுரைகளையுடையதும்,

"புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவிஅகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்
கவியெனக்கிடந்த"

தும் ஆகிய கோதாவரி என்னும் புண்ணிய நதி தீரத்தைச் சென்றடைந்தார்; தமக்குரிய வாஸஸ்தல

மாகக் கருதினர்; யாக்ஞவல்கியபுரம் என்ற ஒரு நகரத்தை உண்டுபண்ணினர்; அங்கேயே வஸித்து வரலானர். மார்க்கண்டேயர், கண்வர், மாந்தியந்தினர் முதலிய பல மஹர்ஷிகள் யாக்ஞவல்கியரிடம் வேதம் முதலியவற்றை அத்யயனஞ் செய்துவந்தார்கள்.

## காத்யாயனியின் விவாஹம்.

இங்ஙனமாக, மிக்க கீர்த்தி வாய்ந்த ஆச்வலாயனர் என்ற மஹர்ஷி மிக்க அழகும், நற்குணங்களும் அமையப் பெற்ற காத்யாயனீ என்ற பெயரினை உடைய தமது கன்னிகையை மணந்துகொள்ளுமாறு யோகீந்திரராகிய ஸ்ரீ யாக்ஞவல்கியரை வேண்டிக் கொண்டார். யாக்ஞவல்கியரும் அந்த வேண்டுகோளை ஏற்று உடன்பட்டார்; நல்ல சுப முஹூர்த்தத்தில் காத்யாயனியை மணந்து கொண்டார்; கிருஹஸ்த தர்மத்தை விதிப்படி அனுஷ்டித்தார்; எல்லோராலும் புகழப்பட்டார்.

## மஹர்ஷிகளின் குடியேற்றம்.

இப்படி ஞானத்தாலும் சீலத்தாலும் ஆசாரத்தாலும் சிறந்து விளங்குகின்ற ஸ்ரீஸானந்தரது புகழ் எங்கும் பரவலுற்றது. பல இடங்களிலிருந்தும் மஹர்ஷிகள் அந்த அயாதயாம வேதகோஷத்தால் சிறந்துள்ள தபோவனமாகிய யாக்ஞவல்கிய புரத்

திற்கு வந்து குடியேறினார்கள். அவர்கள் செய்யும் ஹோமங்களால் ஹவிஸ்வாஸனையுடன் கூடிய புகைக் கூட்டம் உயரக்கிளம்பி ஆகாயத்தை அளாவியது. அது—'பற்றற்ற—செல்லமுடியாத மார்க்கத்தில் மஹர்ஷிகளால் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸைத்தூக்கிக் கொண்டு செல்லுதற்பொருட்டு அக்னிபகவான் செய்துகொண்டபடிக்கட்டுகளோ' என்றுகண்டோர் நினைக்குமாறு இருந்தது. 'ஸ்நானம், ஆசமனம் முதலியவற்றால் கோதாவரி நதியை பரிசுத்தையாகச் செய்து அநுக்கிரஹிக்க மனித உருவமெடுத்து வந்த தபம்' என்று நினைக்கக்கூடியவர்களாக அங் குள்ள மஹர்ஷிகள் விளங்கினார்கள்.

## இராஜ ஸூயம்.

---

இங்நிலையில், ஜனக மஹாராஜர் ஓர் இராஜ ஸூய யாகத்தைச்செய்து ஸ்ரீமந் நாராயணனைப் பூஜிக்க விரும்பினார்; ஸ்ரீயாக்ஞவல்கியரை அழை த்து வரும்படி பிரதான புருஷனை அனுப்பினார். அவன் அவ்வாறே ஸ்ரீயாக்ஞவல்கியரிடம் வந்தான்; பயபக்தியுடன் வணங்கிக் கைகூப்பி நின்றான்; "ஜனக மஹாராஜர் இராஜ ஸூயயாகம் ஒன்றைச் செய்யக்கருதியுள்ளார்; தங்களைச் சிஷ்ய கணங்களு டன் அழைத்து வரும்படி எனக்குக் கட்டளை தந்துள் ளார். இதுவே எனது வரவின் காரணம்" என்று ஸ்வாமிகளை நோக்கிக் கூறினான்.

கேட்ட வாஜஸநேயர் புன்னகைபூத்து 'அப்படியே வருவோம்' என்று கூறி அந்தப் பிரதான புருஷனை அனுப்பினர்; அன்றைப் பகலைப் பிரும்ம விசாரத்திலே செலவிட்டார்; மாலைக்கடன்களையும் செய்து முடித்தார்; இரவில் யோகாஸனத்தில் வீற்றிருந்து இந்திரியங்களை விஷயாதிகளிலே செல்லவொட்டாமல் தடுத்தார்; ரேசக, பூரக, கும்பகாதிகளால் தேஹத்தைச் சோதித்தார்; யோகஸாமர்த்தியத்தால் மலர்ந்த ஹிருதய கமலமாகிய ஸிம்மாஸனத்தில் ஸ்ரீமந் நாராயணனை எழுந்தருளுவித்து நிஷ்டையிலிருந்தார்.

இவ்வாறாக, சுக்கிரோதயம் ஆகியது; "அபராத்திரியாகிய பிராஹ்ம முஹூர்த்தம் வந்துவிட்டது; தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பீர்களாக" என்று மஹர்ஷிகளும், பிரயாணிகளும் தங்கள் தங்களுடைய புத்திர மித்திராதியர்களின் பெயர்களைச் சொல்லிக்கூவி எழுப்பினர்கள். யாக்ஞவல்கியரும் நிஷ்டையிலிருந்து அகன்றனர். விடியற்காலத்திலே செய்யவேண்டியவற்றை விதிப்படி செய்தார்; பகவானை ஆராதித்தார்; சிஷ்யர்களுடன் ஜனக மஹாராஜனுடைய யாகசாலையை நோக்கிப் புறப்பட்டார். வரும் வழியிலே பலவகையான ஸத் கதைகளைச் சொல்லிக்கொண்டே வந்தமையால் செல்லவேண்டிய வழி குறைவாகத் தோன்றியது. யாகசாலை எதிர்ப்பட்டது. யாக்ஞவல்கியர் சிஷ்யர்களுடன் வந்து கொண்டிருப்பதை அறிந்த ஜனக மஹாராஜன்

மஹர்ஷிகணங்களுடனும், மந்திரி முதலாயினோர்களுடனும் எதிர்கொண்டு சென்று வரவேற்றான்; யாகசாலைக்கு அழைத்து வந்தான்; சிறந்த தகுதியான ஆஸனத்திலே அமர்வித்து உபசாரம் செய்தான்.

அங்கே அநேக மஹர்ஷிகள் வந்து கூடி இருந்தார்கள். அவர்கள் அனைவரும் யாகஞ்செய்து அனுபவம் வாய்ந்தவர்கள்; எல்லா வேதங்களிலும் சிறந்த அறிவைப் பெற்றவர்கள்; ச்ரௌதத்தை நன்றாய் அறிந்தவர்கள்; பல முறைகள் யாகங்களைச் செய்வித்தவர்கள். அப்படிப்பட்ட மஹர்ஷி மண்டலத்தின் நடுவிலே நக்ஷத்திரங்களின் மத்தியிலே பூர்ணசந்திரன் போலவும், விருக்ஷங்களின் மத்தியிலே பாரிஜாதம் போலவும், பர்வதங்களின் நடுவிலே மஹாமேரு போலவும், கிரஹங்களின் மத்தியிலே ஸூரியபகவான் போலவும் ஸ்ரீயாக்ஞவல்கியர் விளங்கினார். யாகத்தின் பொருட்டு நியமிக்கப்பெற்ற ரித்விக்குக்களின் மந்திரங்களால் அழைக்கப்பெற்று வந்திருந்த இந்திரன் முதலிய தேவர்களின் காந்தியால் யாகசாலை மிகவும் பிரகாசமுள்ளதாக இருந்தது. விதிப்படி யாகம் நடத்தப்பெற்று அவபிருதமும் நிறைவேறியது.

## அக்ரபூஜை பெற்றது.

---

பின்னர், ஸ்ரீயாக்ஞவல்கிய மஹர்ஷியின் சரணகமலங்களில் மிகவும் பற்றுவைத்த ஜனகமஹா

ராஜன் அங்கே கூடியிருக்கும் மஹர்ஷிகளை நோக்கி "தபோதனர்களே, ப்ரும்மவித்துக்களுட் சிறந்தவர்களே, உங்களுடைய அனுக்கிரஹத்தால் எனது யாகம் இனிது நிறைவேறியது; அவபிருதமும் நடைபெற்றது. இப்பொழுது ஸ்வர்ணமயமான ஆயிரம் பசுக்களைத் தானமாகக் கொடுத்து அக்ர பூஜையைச்செய்ய விரும்புகிறேன். அப்பூஜையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தகுதிவாய்ந்த மஹாபுருஷர் இன்னார் என்பதைத் தயைசெய்து ஒரு மனதாகத் தெரிவித்தருளல் வேண்டும்" எனத் தெரிவித்துக் கொண்டான்.

கேட்ட மஹர்ஷிகள் எல்லோரும் மௌனமாயிருந்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் யாக்ஞவல்கியர் ஜனக மஹாராஜனை நோக்கி "அரசே, நீர் விரும்புகிறபடி அந்த ஆயிரம் ஸ்வர்ணப் பசுக்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுந்தவன்யானே; கிரமப்படி என்னைப் பூஜிக்கலாம்" என்றனர். உடனே "யாக்ஞவல்கியர் மிகவும் மஹிமை வாய்ந்தவர். அவரே அக்ர பூஜையை ஏற்றுக்கொள்ளத் தகுந்தவருமாவர்." என்று ஆகாயத்தில் ஓர் அசரீர வாக்கும் உண்டாயிற்று. ஸபையிலிருந்த எல்லாத் தேவர்களும் ஸரி என்று ஒத்துக்கொண்டார்கள். ஏனையோர் ஆச்சரியமடைந்தனர்.

அப்பால், நிமிகுலத்தோன்றலாகிய ஜனகர், ஆகாசவாணியைக் கொண்டாடி ஸானந்தருடைய

சரணங்களிலே தமது சிரப் படும்படி நமஸ்காரம் பண்ணினார்; தமது பத்னியால் ஸமர்ப்பிக்கப்பெற்ற தீர்த்த தாரையுடன் அந்த ஆயிரம் ஸ்வர்ணப் பசுக்களையும் ஸ்ரீயாக்ஞவல்கியருக்குத் தானமாகக்கொடுத்தார்; விதிப்படி அக்ர பூஜையையும் செய்தார்; தமது எண்ணம் நிறைவேறியமைக்கு மகிழ்ந்தார்.

## மஹர்ஷிகளை வென்றது.

இப்படியாக, அந்த யாகஸபையிலே குழுமியிருந்த வைசம்பாயனர் முதலிய மஹர்ஷிகள் யாக்ஞவல்கியரைநோக்கி "ஸானந்த்ரே, சற்றுப் பொறுப்பீராக. உமது ஞானத்தை நாங்கள் பரிசோதிக்க விரும்புகிறோம். வியாகரணம், சந்தஸ், சிக்ஷை, நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம், வைத்தியம், தனுர்வேதம், காந்தர்வவேதம், புராணம், நியாயம், தர்மசாஸ்திரம், ஸாங்கியம், யோகம், அறுபத்துநான்கு கலைகள் முதலிய அனைத்து வித்யைகளிலும் நிகரற்ற அறிவு வாய்ந்த பெரியோரால் பெறக்கூடிய இந்த அக்ர பூஜையை நீர் எப்படி அடைவது?" என்று கூறிக் கூச்சலிட்டார்கள். ஸானந்தர் தமது ஆசார்யரான ஸூரியபகவானது குமாரனாகிய யமனை நினைத்தார்.*

* அக்கால் ப்ரும்மதேவரின் புத்திரராகிய நாரத மஹர்ஷி யமலோகஞ் சென்றார். யமனால் வரவேற்கப்பட்டு ஆஸனத்தில் அமர்ந்தார். வந்த கார்யத்தைக் கூறலானார்.

நினைத்தலும், யாக்ஞவல்கியரது கருத்தைத் தெரிந்துகொண்ட யமன் தன்னுடைய படர்களை அவ்விடத்திற்கு அனுப்பினன். யமனால் அனுப்பப் பட்ட படர்கள் சண்டாள உருவத்துடன் யாகசாலைக்கு வந்தார்கள் 'தமோகுணமே அனேக உருவங் களுடன் வந்திருக்கின்றதோ' என அவர்கள் காணப் பட்டார்கள். பிரளயகால மேகங்கள் போலவும், சரீரத்துடன் தோன்றிய பாபராசிகள் போலவும்,

---

"தர்மராஜ, முன்னொருகால் மஹேந்திரன் உபேந்திரன் ஆகிய இருவர்களும் யாகஞ்செய்யக்கருதி அதற்குப் பிரஹஸ் பதிபகவானை 'விஜயஞ் செய்யவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்கள். உபேந்திருடைய யாகத்திற்குப் பிருஹஸ் பதி தாமதித்து வரும்படி நேர்ந்தது. உபேந்திரர் அஷ்டா வக்கிரரை அத்வர்யுவாகவரித்து யாகத்தை நடத்தினர். பின்பு பிருஹஸ்பதி வந்து கோபங்கொண்டவராகி "மநுஷ்யனாக ஜனிக்கக்கடவீர்' என்று அஷ்டாவக்கிரரைச்சபித்தார். பதில் சாபம் கொடுக்க முயன்ற அஷ்டாவக்கிரரை உபேந்தி ரன் தடுத்து 'நிமிகுலத்தில் அரசனாக நீர் ஜனியும். நான் யாக்ஞவல்கியராக அவதரித்து உமக்கு ஞானோபதேசஞ் செய்து உம்மை ஜீவன்முக்தராகச் செய்வேன்' என்று அநுக்கிரஹித்தான். அதன்படி நிமி குலத்தில் அஷ்டா வக்கிரர் அரசராக ஜனித்திருக்கிறார். ஸ்ரீநாராயணன் யாஜ்ஞவல்கியராக அவதரித்து அரசன் ஸபையில் வீற்றிருக் கிறார். அரசன் யாக்ஞவல்கியருக்கு அக்ரபூஜை செய்த காரணமாக மற்றமஹர்ஷிகள் கூச்சலிடுகிறார்கள். இந்த ஸமயத்தில் உமது பிதாவின் சிஷ்யரான யாக்ஞவல்கியருக்கு உதவி செய்வீராக" என்று சொன்னர். பிரஸ்தாவசதம்ப் ரத்னாகரம் 5, 6வது பாகம்.

பயங்கரமான உருவத்துடன் வந்த அந்த யமபடர்கள் "இந்த ஸ்வர்ணப்பசுக்கள் எங்களுடைய பொருள்கள் அல்லவா? அப்படியிருக்க அவற்றை எங்களையன்றிக் கொடுப்பவன்யாவன்? வாங்குபவன்யாவன்?" என்று கூறிக்கொண்டு அரசனது ஸமீபத்தை அடைந்து அந்த ஸ்வர்ணப்பசுக்களை அபஹரிக்க முயற்சி செய்தார்கள்.

தோள்களில் இறந்த கன்றுகளைத் தாங்கிக் கொண்டிருப்பவர்களும், கோழிமுட்டைகள் நிரம்பிய உறிகளைக் கையிலே ஏந்திக்கொண்டிருப்பவர்களும், மத்யபானத்தால் மதங்கொண்டு கெட்டவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருப்பவர்களும், யாகசாலை முழுவதிலும் தாம்பூல ரஸத்தைத் துப்புகிறவர்களும், தாம்தாம் எடுத்த கோரோசனையின் அளவைக் காட்டிக்கொள்கிறவர்களுமான அந்தச்சண்டாளர்களை வைசம்பாயனர் முதலிய மஹர்ஷிகள் கண்டு பயங் கொண்டார்கள்; விவாத ஆசையை விட்டார்கள்; கமண்டலு, ஆஸனம் முதலியவைகளை மறந்தார்கள்; ஜடைமுதலியன அவிழ்ந்து விட்டமையையும் கவனியாமல் மிக்க பரபரப்புடன் "இஃதென்ன விபரீதம்" என்று கூறிக்கொண்டு ஓடத் தலைப்பட்டார்கள்.

கண்ட ஜனகன் அந்தச் சண்டாள உருவினர்களைநோக்கி "நீசர்களே, உங்களது அஞ்சாமைதான் என்னே! துஷ்டர்களைத்தண்டிப்பவனாகிய நான் இங்கே இருப்பதைப் பாராதவர்போலக் கூச்சலிடு

கின்றீர்களே. இதனை அறியாமை என்பதா? அஞ்சாமை என்பதா? உடனே அப்பாற் செல்லுங்கள்" என்று கம்பீரமான குரலுடன் அதட்டினன். கேட்ட அச்சண்டாளர்கள் ஜனகனை நோக்கி "அரசே, உயிரற்ற பசுக்களை எடுத்துக்கொள்ளும் உரிமையைத் தாங்கள் எங்களுக்குக் கொடுத்துள்ளீர்கள். அதன்படி நாங்களே இந்தப் பசுக்களுக்கு உரிமையாளர்கள். எங்களுடைய உரிமைப்பொருளை எடுத்துப்போகவே வந்திருக்கின்றோம். சிறிதும் தங்களுடைய கட்டளையை மீறி நடக்கவில்லையே. எதற்காகக் கோபிக்கிறீர்கள்" என்று கூறினார்கள்.

கேட்ட அரசன் புன்சிரிப்புக்கொண்டு எல்லா மஹர்ஷிகளையும் பார்த்து "தபோதனர்களே, இச்சண்டாளர்களுடைய வார்த்தைகளைக் கேட்டீர்களா? நீங்கள் இந்த ஸுவர்ணப் பசுக்களுக்கு உயிரைக்கொடுத்து ஓட்டிச் செல்லுங்கள்" என்று பல முறைகளில் உரக்கக்கூறினன். கூறக்கேட்டும் மஹர்ஷிகள் மௌனத்தால் தங்களது சக்தியின்மையைத் தெரிவித்துக்கொண்டார்கள். பின்னர், அரசன் ஸ்ரீ யாக்ஞவல்கியருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கித் தனது கருத்தை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக்கொண்டான்.

## ஸுவர்ணப் பசுக்களைப் பிழைப்பித்தது.

---

அவ் வேண்டுகோளுக்கிணங்கிய ஸானந்தர் ஸங்கற்பத்திற்குப் பொருந்திய விசேஷ மந்திரங்களை

ஜபஞ்செய்தார்; கமண்டலு தீர்த்தத்தால் அந்த ஸுவர்ணப் பசுக்களைப் ப்ரோக்ஷித்தார். உடனே அவை அம்மா என்று கத்திக்கொண்டும்; கண்களைத் திறந்து பார்த்துக்கொண்டும்; காதுகளாலும், வாலாலும் கொசு, ஈ முதலிய வற்றை ஓட்டிக்கொண்டும்; புதிய ஜனங்களைக்கண்டமையால் மருண்டு கொம்புகளை அசைத்துக்கொண்டும்; துள்ளிக் குதித்துக் கொண்டும் வாலைத்தூக்கியவைகளாய் ஸ்ரீ யாக்ஞவல்கியருடைய ஸமீபத்திற்கு வந்து அலங்கரித்தன. கன்றுகள் தத்தம் தாய்ப்பசுக்களின் குடம்போன்ற மடிகளை ஊட்டிக்கொண்டு ஸந்தோஷமாக விளையாடின.*

கண்ட அரசன் பெருமகிழ்வுற்றான். ஜனங்கள் ஆச்சரியங்கொண்டு கொண்டாடினார்கள். வைசம்பாயனர் முதலாயினோர் வெட்கித் தலைகுனிந்தனர். வெற்றிபெற்ற யாக்ஞவல்கியர் தம்முடைய சிஷ்யகணங்களுடன் அரசனிடம் விடைபெற்றுத், தமது ஆச்சிரமத்திற்குச் சென்றார்.

## பிரும்மதேவரும், மஹர்ஷிகளும்.

---

இவ்வாறாக, வைசம்பாயனர் முதலிய மஹர்ஷிகள் 'நாமும் யாக்ஞவல்கியர்போல ஜடையை உடைய

---

*"ஸுவர்ணப்பசுக்களுக்கு உயிரைக்கொடுத்தவருக்கு நமஸ்காரம்" என்பது நாமாவலியில் ஒன்று.

வர்களாயிருக்கிறோம்; சுத்தமான யக்ஞோப வீதத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறோம்; ஜபமாலைகளை உருட்டுகின்றோம்; சரீரத்தை உலர்த்துகின்றோம். என்றாலும், நமக்கும் அவர்க்கும் உள்ள பேதமோ பூனைக்கும் புலிக்கும் உள்ள பேதம்போன்றிருக்கிறது. பூனை, புலியை ஒக்குமா? நம்முடைய தபஸ்முதலியன நிந்திக்கத் தக்கவையே' என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்பவரானார்கள்; ஒன்றுகூடிப் பிரும்ம லோகம் சென்றார்கள்; தேவர்கள், ஸனகாதி யோகீசர்கள், வேதாதி வாங்மயங்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்கள் முதலிய பலராலும் ஸேவிக்கப்பட்டு ரத்தின ஸிம்மாஸனத்தில் ஸரஸ்வதி தேவியுடன் எழுந்தருளியிருக்கும் நான்முகக்கடவுளைத் தரிசனஞ் செய்தார்கள்; பலவகையாக ஸ்தோத்திரம் செய்து ஸமயம் பார்த்து "நான்முகத் தேவே, மும்மூர்த்திகளின் அம்சாவதாரம்போலப் பூலோகத்திலே யாக்ஞவல்கியர் என்ற முனிவர் ஒருவர் இருக்கின்றார். அவரால் நாங்கள் ஜனகரது யாகத்திலே அவமதிக்கப் பெற்றோம். இம்மாதிரியான அவமானம் இதுவரையில் எங்களுக்கு நேர்ந்ததில்லை. அவரது மேதாசக்தியோ பெரிதும் வியக்கத்தக்கதாயிருக்கிறது. ஆதலின் எங்களால் அவரை ஜயிக்க இயலவில்லை. எந்த உபாயத்தாலாவது தாங்கள் அவரை நிக்கிரஹம்செய்து எங்களைக் காத்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள்.

கேட்ட பிரும்மதேவர் மஹர்ஷிகளை நோக்கி "தபோதனர்களே, அந்த ஸானந்தரை வெல்லக் கூடியவர் உலகத்தில் இல்லை. அவர் எல்லாவற்றையும் அறிந்தவர்; தாயின் கர்ப்பத்திலிருக்கையிலேயே ஸ்ரீமந் நாராயணமூர்த்தியால் உபதேசம் பண்ணப் பெற்றவர். ஆனாலும், உங்களது வேண்டுகோளை நிறைவேற்ற ஓர் உபாயத்தைச் செய்து பார்ப்போம்" என்று கூறினார்; யாக்ஞவல்கியரது மஹிமையை இன்னும் பிரஸித்தப்படுத்த விருப்பங்கொண்டார்; சற்றுநேரம் ஆலோசனை செய்யலானார்.

## கார்க்கியின் வருகை.

---

அப்பொழுது பிரும்மதேவரது இச்சையின் படி ஒருபெண்மணி அவர்களது முன்னே தோன்றினாள். களங்கமற்ற சந்திரகலைபோலவும், நிலைபெற்ற மின்னற்கொடிபோலவும், உயிருள்ள தங்கப்பதுமை போலவும் விளங்குகின்றவளும்; எல்லாத்தேவமாதர் களுக்கும் மேற்பட்ட ரூபஸம்பந்துள்ளவளும்; குற்ற மற்ற அவயவங்களை உடையவளும் ஆகவிளங்குகின்ற அந்தப் பெண்மணி சதுர்முகனை நோக்கி "ஸ்வாமி, நான் இங்கே செய்யவேண்டிய காரியம்யாது? தயை செய்து திருவாய் மலர்ந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

உடனே பிரும்மதேவர் அப்பெண்மணியை நோக்கி "ஏ, ஸுந்தரி, நீ இப்பொழுது திகம்பரை

யாக இருக்கிறாய். அஃது உனக்கும், உன்னை மணக்கும் உரிமையும் தகுதியும் வாய்ந்த புருஷனுக்குமே புலப்படும். மற்றவர்களுக்கு ஆடையுடுத்த மங்கையாகவே காணப்படுவாய். பூலோகத்தில் யாக்ஞவல்கியர் என்ற ஒரு சிறந்த முனிவர் இருக்கிறார். அவரை என்னாலும் வெல்ல முடியாது. அவரால் ஜயிக்கப்பட்ட இம்முனிவர்கள் என்னிடம் கூறிக் குறைமுடித்துக்கொள்ள வந்திருக்கின்றார்கள். நீ இந்த முனிவர்களுடன் அந்த யாக்ஞவல்கியரிடத்திற்குப் போகவேண்டும். எந்த உபாயத்தாலாவது அவரை வென்று இந்த முனிவர்களது மனஸ்தாபத்தைப் போக்கவேண்டும்" என்று கட்டளையிட்டார். பிரமனது மானஸகன்னிகையும் கார்க்கி என்ற பெயரினையுடையவளும் ஆகிய அப்பெண்மணி அந்த முனிவர்களுடன் கோதாவரீ தீரத்திற்கு வந்தாள்; நதியிலே ஸ்நானஞ்செய்தாள்; யாக்ஞவல்கியரைத் தரிசனம்பண்ணச் சென்றாள்.

## யாக்ஞவல்கியரும்—கார்க்கியும்.

---

அவள் திகம்பரையாக இருந்த போதிலும் பிரும்மதேவரது அனுக்கிரஹத்தால் வஸ்திரந் தரித்தவள்போல எல்லாருக்கும் காணப்பட்டாள். சிறந்த பூஷணங்களால் அலங்கரிக்கப்பெற்று விசேஷ காந்தியுடன் விளங்குகின்ற அந்த கார்க்கி யாக்ஞவல்கியபுரத்திற்குள் நுழைந்தாள்; அங்கே அமைந்

திருக்கும் யாக்ஞவல்கியரது ஆச்சிரமத்திற்குச் சென்றாள்; வேதசாஸ்திரங்களைச் சிறப்பாகக் கற்றுணர்ந்த அந்த முனிவரது திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினாள்; "பகவானே, பிரும்மராதரின் புத்திரரே, ஸுநந்தையின் தபோபலமே, எல்லாக்கலைகளிலும் தாங்கள் பெற்றிருக்கிற அபூர்வமான சக்தியை நான் பல மஹர்ஷிகளும் சொல்லக் கேட்டேன்; தங்களுடன் வாதம் செய்தற்பொருட்டு இங்கே வந்தேன்; வியாகரணத்திலுள்ள எனது ஸாமர்த்தியத்தையும், தர்க்கத்தின் ஞானத்தையும், காபிலதந்திரம், சிக்ஷை, கல்பம், சந்தஸ் சாஸ்திரம், ஜ்யோதிஷம், காமசாஸ்திரம், பிறகலைகள் முதலியவற்றிலுள்ள விசேஷத் திறமையையும் காண்பிவித்து எனது கீர்த்தியைப் பிரஸித்தி செய்து கொள்ளவே வந்திருக்கிறேன்; வாதபிக்ஷை கொடுப்பீராக" என்றனள்.

கார்க்கியின் பொருளடங்கிய சொற்களைக் கேட்ட ஸாநந்தர் "பெண்ணே, 'நலத்தகையார் நாணுமை இன்று' என்பார்கள். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன பெண்களிடம் இருக்க வேண்டிய சிறந்த நாற்குணங்களாகும். குலஸ்திரீகள் தங்களது பெண்தன்மையாகிய அரசினைக்காக்க நாற்குணங்களையும் நான்குபடைகளாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பர் பெரியோர். இங்ஙனமாக உன்னிடமிருந்து அந்தச் சிறந்த நாணம் எப்படி நீங்கிற்று! அறிவுள்ளவளாகக்காணப்படும் உன்னிட

மிருந்து உயிரினுஞ்சிறந்த அந்த நாணம் எப்படி விலகியிருக்கின்றதோ அப்படியே நீ என்னிடமிருந்து வெகுதூரம் விலகிப்போய்விடு. குலஸ்திரீகள் அல்லாதவர்களும் தங்களது உடலை வஸ்திரத்தால் மறைத்துக்கொண்டிருக்கிறார்களே. வஸ்திரமின்றித் திகம்பரையாக இருக்கும் உன்னைப் பார்ப்பதால் பல கெடுதல்களும், அபகீர்த்தியும் உண்டாகும். அதனால் உன்னைப்பார்க்கவும் க்ஷேமம் விசாரிக்கவுமே நான் விரும்பவில்லை. அப்படியிருக்க, எப்படி நான் உன்னுடன் எல்லா சாஸ்திரங்களிலும் வாதஞ் செய்ய முடியும்? 'குலஸ்திரீகளுக்குப் பொன்னாபரணங்கள் ஆபரணங்களாக மாட்டா. நாணமே ஆபரணமாகும்' என்பது நீதிவாக்கியமல்லவா? அதனை அறியாது வெட்கத்தையும் விட்டு வந்திருக்கின்ற உன்னுடன் நான் ஸம்பாஷித்தால் என்னுடைய ஆசார்யர்களாகிய ஸ்ரீமந் நாராயணனும், ஸூரியபகவானும் என்னை நிந்திப்பார்கள். இந்த உலகத்திலும், பரலோகத்திலும் ஸுகத்தை விரும்பாத புருஷனே உன்னைப் பார்க்க விரும்புவான். நான் விரும்பமாட்டேன். உடனே இவ்விடம் விட்டு அப்பாற்போ" என்றனர்.

## கார்க்கியின் விவாஹம்.

---

கேட்ட கார்க்கி வெட்கங்கொண்டாள்; பயந்தாள்; விரைந்து தன்னை மறைத்துக்கொண்டாள்; முனிவர் கேட்குமாறு "யோகிச, எனது குற்றத்

தைப் பொறுத்தருளவேண்டும். நான் ப்ரும்ம தேவரின் மானஸகன்னிகையாவேன். 'நான் திகம்பரையாக இருப்பது எவரது கண்ணுக்குப் புலப்படுமோ அவரே எனது பர்த்தா ஆவர்' என்பது ப்ரும்மதேவரது திருவாக்கு. தங்களுடன் வாதம் புரியும் விருப்பம் இப்பொழுது எனக்கு இல்லை. தயைசெய்து தாங்கள் என்னை மணந்து கொண்டு காத்தருளல் வேண்டும்" என்று ப்ரார்த்தித்தனள்.

அப்பால், ஸானந்தர் "தாமரைக்கண்ணி, என்னுடன் வாதஞ்செய்ய வந்த உனக்கு இடையில் இம்மாதிரியான எண்ணம் உண்டானதற்குக் காரணம் யாது? நான் மன்மதனுக்கு வசப்படும் ஸ்வபாவமுள்ள இந்திரியங்களை அடக்கியவன்; விருதங்களாலும், உபவாஸத்தாலும் உடலை வற்றச்செய்து கொண்டிருப்பவன்; மரத்தின் கீழ் உதிர்ந்து கிடக்கும் இலைகளை உணவாகக்கொள்பவன்; சில வேளைகளில் தீர்த்தத்தையும் ஆஹாரமாகக் கொள்பவன்; கௌபீனத்துடன் இருப்பதிலேயே ஸந்தோஷப்படுபவன்; புலி, கரடி, சிங்கம், பன்றி முதலிய கொடிய மிருகங்கள் வஸிக்கும் காட்டிலே வஸிப்பவன். அழகிய சரீரமுள்ள அரசன் போன்றவர்களை மணந்து கொள்ளத்தக்க நீ இத்தகைய என்னை மணந்துகொள்ள முயலுவது தகுதியா? உனது இஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொடுக்கக் கூடிய சிறந்த புருஷனைப்பார்த்து மணந்துகொண்டு உனது அழகினைப் பயன்படுத்திக்கொள்வாயாக"

என்று கூறினர். கூறலும், கார்க்கி மீட்டும் ப்ரும்ம தேவரது கட்டளையையே வற்புறுத்திக்கேட்டுக் கொண்டாள். கடைசியில் யாக்ஞவல்கியர் விதிப்படி கார்க்கியை மணந்துகொண்டனர். [பிரஸ்தாவகதம்ப ரத்னகரம் 5-வது பாகத்தைப் பார்க்க.]

## புத்திரப்பேறு.

இப்படியாக, ஸ்ரீ யாக்ஞவல்கியர் காலக்கிரமத்திலே தமது மூத்த மனைவியான காத்யாயனியிடத்திலே தமக்குச்சமானகுணசீலர்களான காத்யாயனர் முதலான பதினெட்டுப் புத்திரர்களேயும், இளைய மனைவியான கார்க்கியிடத்திலே இருபத்துநான்கு புத்திரர்களையும் அங்ஙனமே பௌத்திரர்களையும்; பெற்ருர். இஹலோக ஸுகத்துடன் பிரும்மானந்தானுபவ ஸுகத்தையும் அனுபவிக்கலாஞர்.

## உத்தாலக ஸம்வாதம்.

பின்னர், ஒரு காலத்திலே எல்லாத்தந்திரங்களிலும் ஸ்வதந்திரர் என்ற சிறப்பினைப் பெற்றுக் கர்வங்கொண்டவரான உத்தாலகர் என்ற மஹர்ஷி யாக்ஞவல்கியரிடம் வந்தார்; "யாக்ஞவல்கிய முனிவரே, நீர் 'நாம் தாயின் வயிற்றிலிருக்கும் பொழுதே ஸ்ரீமந் நாராயணனது அனுக்கிரஹத்தைப் பெற்றிருக்கிறேம்; ப்ரும்மஸ்வரூபத்தை அறிந்

திருக்கின்றோம்; விருத்தவியாஸரது ஆசீர்வசனத்தால் எல்லாத்தந்திரங்களையும் தெரிந்து கொண்டிருக்கின்றோம்; வைசம்பாயனரது பிரும்மஹத்யையைப் போக்கியுள்ளோம்; காயத்திரியின் வரத்தால் ஸூரியபகவானிடமிருந்து அயாதயாமமான யஜுர் வேதத்தை அத்யயனம் செய்திருக்கிறோம்; சித்திரரதன் என்ற கந்தர்வராஜனைச் சிஷ்யனாக அடைந்துளோம்; ஜனகமஹாராஜனது இராஜஸூயயாகத்திலே அக்ரபூஜையைப் பெற்றோம்; ப்ரும்மதேவரது மானஸ கன்னிகையை மணந்து கொண்டோம்.' என்றெல்லாம் எண்ணி எண்ணிக் கர்வங்கொண்டிருக்கிறீர். ஸ்வர்க்கவாஸிகளுக்கு மூப்பும், சாக்காடும் இல்லாமலிருப்பதற்கும்; பூலோக வாஸிகளுக்கு அவ்விரண்டும் இருப்பதற்கும் காரணம் யாது? இந்த வினாவுக்கு ஸரியான விடையை அளித்து உமது ஸாமர்த்தியத்தை நிலை நாட்டிக் கொள்வீராக" என்று பல மஹர்ஷிகள் கூடியிருக்கும் ஸபையிலே ஸானந்தரை நோக்கிக் கூறினர். *

கேட்ட யாக்ஞவல்கியர் உத்தாலகரை நோக்கி "குழந்தாய், பெரும்பாலும் பண்டிதர்களுக்கே தெரியாத விஷயத்தையே நீ என்னைப்பார்த்துக் கேட்டிருக்கிறாய். எல்லாப்புராணங்களின் மர்மமும்

---

* கார்க்கியின் கலியாணத்திற்கு வந்திருந்த மஹர்ஷிகளின் மத்தியில் இந்தவினாக் கேட்கப்பட்டதாகவும் சிலர் கூறுவர்.

எனக்குத் தெரியும். அதனால் உனது கேள்விக்கு ஸரியான பதிலை நான் சொல்லுகிறேன். கவனமாய்க் கேட்பாயாக. முன்னொரு காலத்தில் பரமசிவன் பார்வதியுடன் அந்தப்புரத்தில் இருந்தார். அப்பொழுது தாரகன் என்ற ஓர் அஸுரன் தவம் புரிந்து வரம்பெற்றான்; கர்வங்கொண்டு இந்திராதி தேவர்களை உபத்திரவஞ் செய்யலானான். அந்த அஸுரனது உபத்திரவத்தைச் சகிக்க முடியாத இந்திரன் முதலிய தேவர்கள் அக்னிபகவானை அனுப்ப அவர் பார்வதியினுடைய அந்தப்புரத்தை அடைந்தார். அதனால் பார்வதி தேவர்களிடம் கோபங்கொண்டு 'எனது புத்திரப்பேற்றுக்குத்தடையாயிருந்த தேவர்களுக்கும் தங்கள் தங்கள் பத்னிகளிடம் புத்திரப்பேறில்லாமல் போகட்டும்' என்று சாபமிட்டாள். இவ்வாறு வம்சவிருத்தியில்லாமற்போன தேவர்கள் அரிதின் முயன்று ஆண்டவனது திருவருளால் அமிருதத்தைப்பெற்று உண்டார்கள். அதனால் மூப்புச்சாக்காடுகள் அற்றவர்களானார்கள்.

அவ்வாறே பூமியிலிருப்பவர்களுக்கும் அமிருதம் ஆஹாரமாயிருந்து அவர்களும் ஒரு காலத்தில் மூப்புச்சாக்காடுகளற்றவர்களாயிருந்தார்கள். அதனால் அவர்கள் புத்திரபௌத்திராதியர்களை மிகுப்பெற்று வம்சவிருத்தியுடையவர்களானார்கள். இங்ஙனமாக பூபாரம் அதிகமாயிற்று. அந்த பாரத்தைப் பொறுக்க இயலாத பூமிதேவி ப்ரும்மதேவரிடம் சென்று தனக்கு நேர்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள

லானாள். கேட்ட ப்ரும்மதேவர் பூமியின் துன்பத்தைப் போக்குவதற்காகப் பூமிதேவியுடன் கைலாஸத்திற்குச் சென்றார்; பரமசிவனாரிடத்திலே வந்தன பூர்வமாகத் தெரிவித்துக்கொண்டார்.

தெரிவித்துக்கொள்ளலும் பரமசிவன் பிரும்ம தேவரை நோக்கி 'நான்முகரே, உமக்குத்தெரியாத உபாயமும் உண்டோ? ஒன்றையும் அறியாதவர் போல என்னைக் கேட்கிறீர். என்றாலும், சிறிது கூறுவேன். பூமியிலுள்ளவர்களும் அமிருதத்தையே உண்டுவருகின்றார்களாதலின் அவர்களுக்கு மூப்புச் சாக்காடுகள் உண்டாகவில்லை. அதனால் பூபாரம் அதிகமாகிறது. அந்த உணவை நீக்கி வேறு உணவுப் பொருள்களை அமைத்து விட்டால் பூமிதே வியின் துன்பம் நீங்கிவிடும். நான் யவம், நெல்முதலிய தான்யரூபமாகப் பூமியில் அவதரிக்கிறேன். பார்வதி கோதுமை முதலிய தான்யரூபமாக அவதரிப்பாள். அவற்றை அந்தப் பூலோக வாஸிகளுக்கு உணவாகத் திட்டம் பண்ணும். அவற்றை உண்பதால் அவர்கள் பலவகை ரோகங்களுக்கு உள்ளாகி மூப்புச்சாக்காடு களை அடைவார்கள். அன்றியும், அத் தான்யங்களை உண்டுபண்ணிக்கொள்ள விச்வகர்மா கலப்பையைச் செய்து கொடுப்பான். எனது வாஹனத்தின் வம்சமும் மிகவும் பெருகும். விருஷபம், கலப்பை இவற்றின் துணைக்கொண்டு உழவர்கள் ஏராளமாகத் தானியங்களை உண்டுபண்ணிக்கொள்வார்கள்.' என்று கூறினார். ப்ரும்மதேவரும் அவ்வாறே செய்து

பூமியின் துன்பத்தை நீக்கினர். இப்படியாகப் பூமியிலுள்ளவர்களுக்குப் பிணி, மூப்பு, சாக்காடுகள் உண்டாயின" என்று விடைபகர்ந்தார். கேட்ட உத்தாலகர் வேறுகூற வழியறியாது குனிந்த தலை நிமிராமல் வந்த வழியே செல்லலானர்.

## சாகல்ய ஸம்வாதம்.

---

பிறகு ஒருநாள் மிதிலைக்கு அரசனான ஜனகன் ஓர் அச்வமேத யாகத்தைச் செய்தான். அதற்குப் பல மஹர்ஷிகளும், மஹாவித்வான்களும் வந்து கூடினர்கள். அந்த ஸபைக்கு ஸ்ரீ யாக்ஞவல்கியரும் தம்முடைய சிஷ்யர்களுடன் வந்திருந்தார். அப்பொழுது 'அங்கே கூடியிருந்த மஹர்ஷிகளுக்குட் சிறந்தவரைத் தெரிந்துகொள்ள வேண்டும்' என்ற அவா அரசனுக்கு உண்டாயிற்று. உடனே, அரசன் எழுந்து கைகூப்பி வணங்கி ஸபையோர்களைப்பார்த்து "முனிபுங்கவர்களே, நான் இங்கே ஆயிரம் பசுக்களையும், தக்ஷிணையாக அனேகம் பவுன்களையும் வைத்திருக்கிறேன். உங்களுக்குட் சிறந்தவர் இவற்றை எடுத்துக்கொள்ளலாம்" என்று கூறினன். கூறலும், பலரும் 'எனக்கு, எனக்கு' என்று கூறிச்சண்டையிட்டனர். அக்கால், ப்ருஹ்மதேவரின் அம்சாவதாரமான யாக்ஞவல்கியர் தமது சிஷ்யருள் ஒருவனை அழைத்து "ஸாம ஸ்ரீவஸ்ஸே, இந்தப்பசுக்களும், பவுன்களும் என்னுடையன. இவற்றை நமது

ஆச்சிரமத்திற்கு எடுத்துக்கொண்டுபோ. யார் எதைக் கேட்டாலும் நான் பதில் சொல்லிக்கொள்கிறேன். கேட்க விரும்புகின்றவர்கள் என்னைக் கேட்கட்டும்" என்று சொன்னார். சிஷ்யன் அவற்றை ஆச்ரமத்திற்குக் கொண்டுபோகலானான்.

கண்ட "ஆச்வலர், ஆர்த்தயாகர், புஜ்யு, உஷஸ்தர், கஹோளர், வசக்னுவின் பெண்ணாகிய கார்க்கி, உத்தாலகர் ஆகிய இவர்கள் கோபங்கொண்டு முறையே பலகேள்விகளைக்கேட்டார்கள். யாக்ஞவல்கியர் அவைகளுக்குத்தக்க விடையளித்தார்.

பின்பு கார்க்கி என்பவள் மற்ற மஹர்ஷிகளை நோக்கி "ஓ மஹர்ஷிகளே, விடையளிக்கமுடியாத இரண்டு கேள்விகளை யான் கேட்கிறேன். யாக்ஞவல்கியர் அவைகளுக்குத்தக்க விடையளித்தால் அவரை ஜயிப்பவர் நமக்குள் ஒருவருமில்லை. உத்தரவு கொடுப்பீர்களாக" என்றாள். மஹர்ஷிகளும் உத்தரவளித்தார்கள். கார்க்கி வினவிய இரண்டு கேள்விகளுக்கும் ஸ்ரீயாக்ஞவல்கியர் தக்க ஸமாதானம் சொன்னார்.

பின்பு சாகல்யர் பல கேள்விகளைக்கேட்க அவைகளுக்கும் யாக்ஞவல்கியர் தக்க விடையளித்து "ஓ சாகல்ய, நான் உம்மை ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு மறுமொழி சொல்லாவிடில் உமது தலை விழக்கடவது" என்று சொல்லிக் கேள்விகேட்டார்.

அந்தக் கேள்விக்கு ஸமாதானஞ் சொல்ல முடியாமல் சாகல்யர் மரணமடைந்தார். *

கண்ட அரசன் ஸ்ரீயாக்ஞவல்கியரை வணங்கினான்; 'தனது யாக ஸபையிலே ஒரு ப்ராஹ்மணனுடைய மரணம் நேர்ந்ததே' என்று வருந்தினான்; சாகல்யரைப் பிழைப்பித்துத் தருமாறு வேண்டினான். வேண்டலும், யாச்ஞவல்கியர் மிருதஸஞ்ஜீவினி என்ற மந்திரத்தை ஜபித்து அதன் மஹிமையால் சாகல்யரைப் பிழைக்கச்செய்தார்.

‡ உடனே, சாகல்யர் "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி—விழிப்பது போலும் பிறப்பு"

---

* "சாகல்யரும் யாச்ஞவல்கியரும் ஸம்வாதஞ் செய்யுங்கால் நமது இருவருடைய ஸம்வாதத்திலும் மத்யஸ்தராக விருக்கத்தக்கவர் ஒருவருமில்லை யாதலால் 'இந்தத் தர்ப்பத்தால் செய்யப்பெற்ற கூர்ச்சம் மத்யஸ்தராக விருக்கட்டும். அபஜயமடைந்தவர்களின்சிரத்தைக்கொய்துவிடட்டும்' என்று கூர்ச்சத்தை மத்யஸ்தமாக வைத்துக்கொண்டு வாதம் நிகழலாயிற்று. முடிவில் அபஜயமடைந்த சாகல்யருடைய சிரத்தை அந்தக் கூர்ச்சம் கொய்து விட்டது. சாகல்யர் மரணமெய்தினர்" என்று புராணங்கள் கூறுகின்றன.

‡ "ஜனகஸபையில் ஸ்ரீயாக்ஞவல்கியருடையகோபத்தால் சாகல்யர் மரணமடைந்தார் பின்பு ஜனகருடைய வேண்டுகோளின்படி யாக்ஞவல்கியர் சாகல்யரைப் பிழைப்பித்தார்" என்று பிருஹதாரண்யச்ருதியில் சொல்லப்படாமையாலும், "அவருடைய எலும்புகள் ஸம்ஸ்காரத்திற்கு

"நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிடந்த—மறை மொழிதானே மந்திரம் என்ப" என்றும் உள்ள நீதிகளை உலகினருக்கு அனுபவத்திற் காட்டுபவர் போல எழுந்தார்; யாக்ஞவல்கியரைப் பலவாக வாழ்த்தினார். அவ்வாறே மஹர்ஷிகள் எல்லோரும் யாக்ஞவல்கியரைப்போற்றினார்கள். அரசனும் கொண்டாடினான்.

---

உபயோகப்படாமல் திருடர்களால் அபஹரிக்கப்பட்டன" என்று சொல்லப்பட்டமையாலும். திரும்பவும் சாகல்யர் பிழைப்பிக்கப்பெற்றார் என்பது வேதத்திற்கு விருத்தமென்று சிலர் சொல்வது பொருந்தாது. பிருஹதாரண்ய ச்ருதியில் சாகல்யருடையதலை விழுந்தது என்று இருக்கிறது. அஷ்டாத்யாயி காண்டத்திலோ ஸமானன் வரையிலுள்ள அவ்விருவர்களின் ஸம்வாதத்தைச்சொல்லி "அபுண்யமான தேசத்திலும், அபுண்யதிதியிலும், அபுண்யமானகாலத்திலும் மரணமடைவாய்; எலும்புகள்கூட ஸம்ஸ்காரத்திற்கு உபயோகப்படவேண்டாம்' என்றுயாக்ஞவல்கியர்சபித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ரங்கராமானுஜ பாஷ்யத்திலோ சாகல்யருடைய தலை பல துண்டுகளாக விழுந்ததென்றும் யாக்ஞவல்கிய சாபத்தால் சாகல்யருடைய சரீரம் எரிக்கப்பெற்றது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அஷ்டாத்தியாயி காண்டத்திற்கும், பிரஹதாரண்ய காண்டத்திற்கும் பேதம் காணப்படுவதால் எதை அப்பிரமாணம் என்று சொல்லலாம்? இரண்டும் பிரமாணமேயாம். ஒரு பிரகரணத்தைவிட மற்றொரு பிரகரணத்தில் அதிகம் சொல்லியிருந்தால் இது விரோதமாகுமா?

இப்படி ஸ்ரீ யாக்ஞவல்கிய மஹர்ஷி எல்லாராலும் கொண்டாடப்பெற்று சிஷ்யர்களுடனும், புத்திர பௌத்திராதிகளுடனும் ஜீவன் முக்தராகப் பிரகாசிக்கலானர்

---

"பிர்ம்ம வித்துக்களிடம் அபசாரப்படக்கூடாது" என்ற விஷயத்தை நிருபிக்க இக்கதையை வேதம் சொல்லி முடித்தது.

அரசனுடைய வேண்டுகோளால் யாக்ஞவல்கியர் சாகல்யரைப் பிழைப்பித்தது முதலியவை வேதங்களின் உப பிரும்மணங்களான புராணங்களால்வெளியிடப்பட்டால் அது வேதவிருத்தமாகுமா? 'யாக்ஞவல்கியர் சாகல்யரைத் திரும்பவும் பிழைப்பிக்கவில்லை' என்று வேதத்தில் சொல்லப்படவில்லை. ஆகையால் இது வேதவிருத்தமல்ல.

'சாகல்யபிராணதாதா' 'சாகல்யபிராணரக்ஷக' என்ற நாமாவலி, பாரதம், பிரும்மாண்டபுராணம், ஆதித்யபுராணம், பிரஸ்தாவகதாம்ப ரத்னகரத்தின் 6-வது பாகம் ஆகிய இவைகள் வேதத்தின் கருத்தை வெளியிட்டன வென்பது திண்ணம்.

வேதங்களின்உபபிர்ம்மணங்களான ஸ்மிருதிபுராணங்களைப்பிடிவாதமாகப்பிரமாணங்களல்லவென்றுசொல்பவர்கள் ஸந்தியாவந்தனத்தை ஸாங்கமாக என் அநுஷ்டிக்கிறார்கள்? வேதத்தில் மார்ஜனம் முதலிய அங்கங்கள் சொல்லப்படவில்லையே? அவை ஸ்மிருதிகளால் சொல்லப்பட்டன வன்றோ? இங்குக் காட்டக்கூடிய பல ப்ரமாணங்களை நமது யஜுஸ்தத்வத்தில் கண்டுகொள்க.

## மைத்ரேயிக்கு உபதேசஞ் செய்தது.

பின்பு ஸன்யாஸமென்ற நான்காவது ஆச்ர மத்தை அநுக்கிரஹிக்க விரும்பியவர்போல் மைத் ரேயி என்ற தமது மனைவியை நோக்கி "மைத்ரேயி, நான் ஸன்யாஸஞ் செய்துகொள்ளப்போகிறேன். காத்யாயனியுடன் உனக்குப் பாகஞ்செய்து வைக்கி றேன்" என்றார். அதனைக்கேட்ட மைத்ரேயி "பகவன், பணத்தால் மோக்ஷம் கிடைக்குமா? எதனால் மோக்ஷங்கிடைக்குமோ அதனை எனக்குக் கொடும்" என்றாள். அதனைக்கேட்டு மிகவும் ஸந்தோஷித்து ஆத்மஞானத்தை அவளுக்கு உபதேசித்து மைத்ரே யியைக் கிருதார்த்தையாகச்செய்தார்.

பின்பு உத்தமாச்ரமத்தை அங்கீகரித்து வைராக்கிய பூஷிதராகப் பிரவாஹ நித்யராக வேதாந் தத்தை எல்லோருக்கும் உபதேசித்துக்கொண்டும், அந்த ஸம்பிரதாயத்தைப் பரவச்செய்து கொண்டும் லோகத்தை அநுக்கிரஹம் செய்பவராய்ப் பிரகாசிக் கிறார்.

சுபம்! சுபம்! சுபம்!

223095